TEACHING OF HISTORY AND CIVICS

(IN TAMIL)

BY

R. LAKSHMINARASIMHAN, M.A., L.T.

School Assistant, Government College, Coimbatore

The National Publishing Co.

MADRAS AND VELLORE.

சரித்திர போதனையும்

ஆட்சிநூல் போதனையும்

ஆசிரியர்

R. இலட்சுமி நரசிம்மன், M.A., L.T.

கவர்ன்மெண்டு காலேஜ், கோயமுத்தூர்

நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி

சென்னை & வேலூர்

பதிப்புரிமை]

[விலை அணா ௯

முதற் பதிப்பு 1941
இரண்டாம் பதிப்பு 1942

Approved by the Text-Book Committee for use as Text-Book in Training institutions-vide page 95 of part I-B of the Fort St. George Gazette dated 2—6—'42.

Printed at The B. N. Press, Mount Road, Madras.

முகவுரை

சரித்திர போதனையும் ஆட்சிநூல் போதனையும் என்ற இப் புத்தகம் போதனுமுறைப் பாடசாலைகளில் ஹையர் எலிமெண்டரி கிரேட் வகுப்புகளில் போதனு முறை பயிலும் மாணவ ஆசிரியர்களின் உபயோகத்திற்காக எழுதப்பட்டுள்ளது. இது சமீபத்தில் கல்வி இலாக்கா வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தைத் தழுவி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் சரித்திரம், ஆட்சிநூல் ஆகிய இரண்டு பாகங்களுள்ளன. இவ்விரண்டு பாகங்களையும் ஆரம்பப் பாடசாலைகளில் முதல் ஐந்து வகுப்புகளுக்குப் போதிப்பதில் ஆசிரியர் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன, போதனுமுறைகளை விவரிப்பதே இப்புத்தகத்தின் முதன்மையான நோக்கமாயினும், போதிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றியும் சுருக்கமான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றேடு பாடசாலைகளில் செய்யவேண்டிய அனுபவசித்தமான வேலைகளைப்பற்றிய குறிப்புகளும், அவற்றிற்கு வேண்டிய பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றைப் போதனுமுறை பயிலுங் காலத்தில் மாணவ ஆசிரியர்கள் தயாரிப்பது மிகவும் அவசியமாகும்.

இப்புத்தகத்தைத் தயாரிப்பதில், சரித்திரம் ஆட்சிநூல் இவற்றின் போதனை சம்பந்தமாகப் பல பேரறிஞர்கள் கூறியுள்ள முக்கியமான விஷயங்களைக் கவனத்தில் வைத்துப்

போதனுமுறைப் பாடசாலைகளில் நான் பதினைந்து வருஷங்களாகப் பெற்றுள்ள அனுபவத்தையும் உபயோகித்துள்ளேன். எனது இச்சிறு முயற்சியை ஆசிரிய நண்பர்கள் பாராட்டி ஆதரித்து இப்புத்தகத்தைச் செம்மையாக்க யோசனைகள் கூற வேண்டுமென்றும் கோருகிறேன்.

இப்புத்தகத்தை நான் எழுதுவதற்குக் காரணமாயிருந்த எனது நண்பர் ஸ்ரீ. M. S. சுந்தரேசுவரன் அவர்களுக்கு எனது நன்றி பெரிதும் உரித்தாகும்.

கவர்ன்மெண்டு காலேஜ்,
கோயமுத்தூர்,
30—1—1941.

R. இலட்சுமி நரசிம்மன்.

பொருளடக்கம்

சரித்திர போதனை

எண்	பொருள்		பக்கம்
1.	பொது விவரம்	...	1
2.	பலவகைச் சரித்திரமும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களும்	...	5
3.	கல்வி இலாக்காப் பாடத் திட்டம்	...	8
4.	போதிக்கும் முறைகள்	...	13
5.	காலக் கிரமம்	...	17
6.	உபகரணங்கள்	...	27
7.	உபகரணங்கள் (தொடர்ச்சி)	...	29
8.	உபகரணங்கள் (தொடர்ச்சி)	...	32
9.	இதர பாடங்களுடன் சம்பந்தப் படுத்துதல்	...	36
10.	சுய உணர்ச்சியை வெளிப்படுத்தும் வேலை	...	39
11.	வெளியிடம் காணச் செல்லுதல்	...	43
12.	பாடங்களைத் தயாரித்தல்	...	45

ஆட்சி நூல்

எண்	பொருள்		பக்கம்
1.	ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆட்சி நூல் போதிப்பதின் நோக்கமும் எவ்வளவு போதிப்ப தென்பதும்	...	48
2.	கல்வி இலாக்காப் பாடத் திட்டம்	...	50
3.	ஆட்சி நூலைப் போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்கள்	...	55
4.	உபாத்தியாயரின் ஆயத்தம்	...	59
5.	உபாத்தியாயரின் ஆயத்தம் (தொடர்ச்சி)	...	69

அநுபந்தம்

பாடக் குறிப்புகள்	...	71
நடித்தலுக் கேற்ற சம்பாஷணை	...	84

சரித்திர போதனை

1. பொது விவரம்

1. நோக்கம்: பள்ளிக்கூடங்களில் பல பாடங்களைக் கற்பிப்பதன் நோக்கம், பொதுவாக, மூவகைப்படும். ஒவ்வொரு பிள்ளையும் பள்ளிக்கூடத்தில்சேர்ந்து படித்துமுடித்த பிறகு, அவன் கற்ற கல்வி, அவன் மேற்கொள்ளும் ஜீவனத்திற்கு உதவியாயிருக்கவேண்டும்; தவிரவும், ஓய்வு நேரங்களில் காலத்தைப் பயனுடன் கழிக்க அக் கல்வி உதவவேண்டும். மூன்றாவதாகக் கல்வி கற்றதன் பிரயோஜனம் என்னவெனில், ஒவ்வொரு மனிதனும் சமூக வளர்ச்சிக்குத் தன்னாலியன்றவரையில் உழைக்கவேண்டும். இம் மூவகையான நோக்கங்களை யொட்டியே பள்ளிக்கூடத்தில் பல பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அப்பாடங்களில்சில ஜீவனத்துக்கு உபயோகமுள்ளவை. சில ஓய்வு நேரங்களுக்கு உதவியாயுள்ளவை; மற்றும் சில சமூக வாழ்க்கைக்கு உதவியாயிருக்கும்படியான உணர்ச்சியை எழுப்பக் கூடியவை. ஆதலின் சரித்திரம் முக்கியமாகப் பிற்கூறிய நோக்கத்துக்குதான் சாதகமாயுள்ளதென்று சொல்ல வேண்டி யிருக்கிறது.

சரித்திரம் படிப்பதன் முக்கியமான நோக்கமென்னவெனில், தற்கால சமூக வாழ்க்கையையும், ஒரு தேசத்தில்

நடக்கும் துரைத்தன முறையையும் நன்கறிவதற்கு உதவியா யிருப்பதுதான். தற்காலத்திற்கு ஆதாரமாயிருப்பது பண்டைக்காலம். அதுபோல, வருங்காலத்திற்கு ஆதாரமா யிருப்பது தற்காலம். உபாத்தியாயர் மனத்தில், இந்நோக்கம் எப்பொழுதும் குடிகொண்டிருக்க வேண்டும். சரித்திரத்தில் எந்த விஷயத்தைப்பற்றிப் போதித்தாலும் அது எப்படித் தற்கால வாழ்க்கையை அறிவதற்கு உதவுகின்றது என்பதை நன்கு தெரிந்து போதிக்கவேண்டும். ஆனால், ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகள் இந்த நோக்கத்தைச் சரிவரத் தெரிந்துகொள்வது அரிது. ஆயினும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சரித்திரம் போதிப்பது மிகவும் இன்றியமையாதது.

2. சரித்திர போதனையின் பயன் : (1) பிள்ளைகளுக்குக் கதை கேட்பதில் அதிக ஆசையுண்டு. சரித்திரத்தில் உண்மைக் கதைகள் எத்தனையோ உள்ளன ; அவை இன்பகரமாயும் இருக்கும். உதாரணமாக, கலிங்க யுத்தமும் அசோகரும் என்னும் கதை எவ்வளவு இனிமையானது! சிவாஜியின் பால்ய சரித்திரம் கேட்பதற்கு எவ்வளவு பிரியமாக இருக்கிறது! இவ்வதிசய உண்மைக் கதைகளைக் கேட்பதால் பிள்ளைகள் திருப்தியடைகின்றார்கள்.

(2) முற்காலத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றிப் பிள்ளைகள் படிக்கும்போதும் கேட்கும்போதும் அவர்கள் மனம் விசாலமடைகின்றது. அவை நடந்தபோது தாங்கள் நேரில் பார்த்தால் எப்படியோ அப்படி மனக்கண்களால் பார்க்கும் சக்தி அவர்களுக்கு ஏற்படுகின்றது.

(3) சரித்திரத்தில் முக்கியமான சம்பவங்களுக்குக் காரணங்களும், காலம் எப்படி மனிதனுடைய நடத்தையை மாறு

பாடு செய்தது என்பதையும், மனிதன் தானிருந்த காலத்தை எப்படி மாறுபாடடையச் செய்தானென்பதையும் சரித்திரத்தின் மூலம் தெரிந்துகொள்ளுகிறோம்.

(4) குழந்தைகளுக்குச் சில இயற்கையான உணர்ச்சிகள் இருக்கின்றன. சும்மா யிருப்பதென்பது அவர்களுடைய சுபாவமில்லை; எப்போதும் ஏதாவது செய்துகொண்டிருக்க வேண்டும். பிறரைப்போல நடித்தல் அவர்களுக்கு இயற்கையானது. இவற்றிற்கெல்லாம் சரித்திரத்தில் இடமேற்படுகின்றது. பண்டைக்காலத்து மனிதர்களைப்போல அவர்கள் நடிக்கலாம். அவர்கள் வசித்துவந்த வீடுகளைப் போலவும், உபயோகித்து வந்த ஆயுதங்களைப் போலவும் மாதிரிகள் செய்யலாம். இவற்றிற்கெல்லாம் சரித்திரம் இடங்கொடுக்கின்றது. நடிக்கத் தகுதியான சம்பவங்கள் நமது தேச சரித்திரத்தில் எத்தனையோ இருக்கின்றன. உதாரணமாக, அலெக்ஸாண்டரும் போரஸும் புரிந்த யுத்தம், அசோகர் நிகழ்த்திய கலிங்க யுத்தம், ஹர்ஷர் தமது சகோதரியைத் தீயில் விழுந்திறக்காதபடி காப்பாற்றியது, இவை போன்ற அநேக சம்பவங்களிருக்கின்றன.

சிறிது காலத்திற்கு முன் வரையில் சரித்திரக் கதைகள் நீதி புகட்டுகின்றன என்று சொல்லிவந்தார்கள். ஆனால், அது சரியல்ல. சரித்திரத்தில் நீதிமானே பலவானென்னும் முடிவுக்கு வரமுடியாது. ராஜரிஷி அசோகரைப்பற்றிப் படிக்கும் குழந்தைகள், கொடிய மிருகத்தன்மையுடைய மிஹிரகுலனைப்பற்றியும் படிக்கவேண்டி யிருக்கிறது. ஆதலால், சரித்திரத்தின்மூலம் நீதிபுகட்டுவதென்பது முடியாத காரியம். தவிரவும் பிள்ளைகளுக்குக் கதைகளைக் கேட்பதில் பிரியமே தவிர கதைசொல்லி முடிந்தவுடன் அக்கதையினால்

என்ன தெரிந்து கொள்ளுகிறோமென்று கேட்டால் அவர்களுக்குக் கதையிலேற்பட்ட ருசிபோய்விடும். மேலும் நீதிகளைப்பற்றிப் பேசுவதைவிட நீதியாக நடப்பதுதான் சிறந்தது. பிள்ளைகள் இந்த விஷயத்தில் சாமர்த்தியமுள்ளவர்கள். நீதியைப்பற்றிப் பேசுகிறவர்கள் அதன்படி நடக்கிறார்களா வென்று ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். அப்படியில்லாவிட்டால் அந்நீதிகளில் அவர்களுக்கு நம்பிக்கை குறைந்துவிடும். ஆதலின், பிள்ளைகளுடைய ஊக்கத்தையும் கவனத்தையும் இழுக்கக்கூடிய கதைகளை ருசிகரமாகச் சொல்லிவிட்டு அத்துடன் நிறுத்திவிட வேண்டியது. அநீதியுள்ளவனுடைய சரித்திரத்தைச் சொல்லும்போது மாத்திரம் அவனிடத்தில் வெறுப்பு ஏற்படும்படி சொல்லவேண்டும்.

3. கற்கவேண்டிய சரித்திர விஷயம் : அடுத்தபடியாக, நாம் தீர்மானிக்க வேண்டிய தென்னவெனில், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் எத்தகைய சரித்திரத்தைக் கற்பதென்பதுதான். சரித்திரம் என்பது பெரிய விஷயம்; பல பாகங்களடங்கியது; எல்லாவற்றையும் கற்பிப்பதென்பது முடியாத காரியம். பிள்ளைகளும் எல்லா விஷயங்களையும் தெளிவுறக் கற்பதென்பதும் முடியாதது. ஆதலால், நம்முடைய நோக்கம் எத்தகையதாயிருக்க வேண்டும்? பிள்ளைகள் ஐந்தாம் வகுப்பு முடியப் படித்துப் பள்ளிக்கூடத்தை விடும்போது நம்முடைய தேச சரித்திரம் முழுவதையும் கதைகள் மூலம் தொடர்ச்சியாகக் கால வரிசைப்படி கற்றிருக்கவேண்டும் என்பதுதான். இதனல் தேச சரித்திர முழுமையும் விவரமாகத் தெரியவேண்டும் என்பதல்ல; ஆனல், முக்கியமான சம்பவங்களைப்பற்றியும், சரித்திர காலத்தில் முக்கியமானவர்களைப் பற்றியும் தெரியவேண்டும்.

2. பலவகைச் சரித்திரமும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களும்

4. பலவகைச் சரித்திரங்கள் : சரித்திர பாடம் மிகவும் பெரிய விஷயமாதலால் அதைப் பல வகையாகப் படிக்கலாம். சரித்திரத்தை எப்படிக் கற்பித்தபோதிலும் கதைகள் மூலமாகத்தான் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்க வேண்டும். பலவகைச் சரித்திரங்களை பின்வருமாறு விவரிப்போம்.

உலக சரித்திரம் : பண்டைக் காலத்தில், அதாவது கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்னதாகவே நாகரிகமுள்ள மனிதர்கள் எகிப்து முதல் சீனு வரையில் பரவி யிருந்தார்கள். அவர்களைப் பற்றித் தெரிந்தவரையில் பிள்ளைகள் படிக்க வேண்டும். ஏனெனில், இப்படிப் படிப்பதால் பண்டைக் காலத்திலேயே நாகரிகமுள்ளவர்கள் அநேக தேசங்களில் இருந்தார்களென்பதும், நம்முடைய தேசத்தைப்போல முற்காலத்தில் நாகரிகமுள்ள தேசங்கள் பல இருந்தன என்பதும் பிள்ளைகளுக்குத் தெரியும்.

நமது தேச சரித்திரம் : ஆரம்பப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் ஐந்தாவது வகுப்பை விடும்போது, நமது தேச சரித்திரத்தில் முக்கியமான சம்பவங்களை அவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். காலக்கிரமத்தில் அச்சம்பவங்கள் கோர்வையாக இருக்கவேண்டும்; அதிகமாக இடைவெளிகள் இருக்கக் கூடாது. அப்படி நமது தேச சரித்திரத்தைப் படிக்கும் போது நமது தேசத்திற்கும் மற்றத் தேசங்களுக்கும் சரித்

திரத்தில் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தை அவர்களுக்கு விளக்க வேண்டும்.

சிறிது காலத்திற்குமுன் வரையில் நமது தேசம் தனிப்பட்டதென்றும், இமயமலையைப் போன்ற இயற்கையான இடையூறுகள் நமது தேசத்திற்கும் மற்ற நாடுகளுக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறைத்து விட்டனவென்றும் வற்புறுத்திச் சொல்லும் சரித்திராசிரியர்கள் பலர் இருந்தனர். தற்காலத்தில் பல துறைகளில் ஆராய்ச்சி விரிந்ததன் பயனுக நமது தேசத்தினர் பண்டைக்காலம் முதல் பல தேசங்களுடன் கூட்டுறவு கொண்டிருந்தனரென்பது வெளிப்படுகின்றது.

மேலே உலக சரித்திர சம்பந்தமாகக் கூறியபடி கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்னதாகவே அரேபியா முதல் சிந்து சமவெளிகள் வரையில் நாகரிகமுள்ள ஜாதியார் வசித்து வந்தனர். சிந்து நதிப் பிரதேசத்தில், **மோஹெஞ்சதாரோ, ஹாரப்பா** என்னுமிடங்களில் சரித்திர சம்பந்தமான பழைய பொருள்களை ஆராய்ச்சி செய்யும் இலாக்கா அதிகாரிகள் பூமியைத் தோண்டி யெடுக்கும் போது பழைய பட்டணங்களின் பாகங்கள் அகப்பட்டன. அவை, ஈராக்குப் பிரதேசத்தில் பண்டைக் காலத்தில் ஸுமேரியர்கள் வசித்து வந்த பட்டணங்களை யொத்திருந்தன. அதிலிருந்து ஒரேவிதமான நாகரிகம் எவ்வெவ்விடங்களில் பரவி இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

தென்னுட்டிலும் தமிழக அரசுகளுக்கும், கடல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கும் நெருக்கமான சம்பந்தமிருந்திருக்கவேண்டு மென்பது பல ஆதாரங்களின் மூலம் தெரி

கிறது. பாண்டிய நாட்டிற்கும் ரோமர் சாம்ராஜ்யத்திற்கும் பண்டைக்காலத்தில் வியாபாரம் பிரபலமாக நடந்து வந்தது. சோழ அரசர்கள் கப்பற்படை வலிமையால் தங்களதிகாரத்தையும், தங்கள் நாட்டு நாகரிகத்தையும் கிழக்கு இந்தியத் தீவுகளில் பரவச் செய்தார்கள். ஆரிய ராஜ்யங்களை ஆண்டவர்களும் கடலைக் கடந்து கிழக்கிலுள்ள தேசங்களிலும், தீவுகளிலும் குடியேறினர்கள். நிற்க, பண்டைக் காலம்முதல் தற்காலம்வரை அந்நிய நாட்டினர் இடைவிடாது நம்முடைய நாட்டிற்கு வந்து கொண்டே யிருந்தனர்.

இவ்விஷயங்களை யெல்லாம் காலக்கிரமமாக, சரித்திரக் கதைகளைச் சொல்லிவரும்போது சேர்த்துக் கூறவேண்டும். இம்மாதிரி செய்வது சரித்திரத்தில் உண்மை கூறலென்னும் முக்கியமான விதியைத் தழுவுகின்றது. மற்றும் தற்காலத்தில் மிகவும் அவசியமான உணர்ச்சியை, அதாவது உலகத்தினர் எல்லோரும் ஒரே குடும்பத்தினரென்னும் உணர்ச்சியை இம்முறை அபிவிருத்தி செய்யும்.

நாமிருக்கும் பிரதேசத்தின் சரித்திரம்: தேச சரித்திரம் படிக்கும்போது நாம் வசிக்கும் பிரதேசம் சரித்திர சம்பந்தம் உடையதாக இருந்தால் அதைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். போதுமான ஆதாரங்களில்லாமையால் பிரதேச சரித்திரத்தை விவரித்துப் போதிக்க முடிவதில்லை. ஆயினும் பிரயாசைப்பட்டால், பிள்ளைகளுக்குத் தாங்கள் வசிக்கும் இடத்தில் பண்டைக்காலத்தில் என்ன சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதைப் படிப்பதில் ஊக்க முண்டாகும்படி செய்யலாம்.

இம்மாதிரி பலவித சரித்திரங்களைப் படிப்பதோடு வேறு விதமாகவும் சரித்திரம் படிக்கலாம். எவ்வித சரித்

திரமா யிருந்த போதிலும், அது பல பாகங்களடங்கியதே. சரித்திரத்தில் முக்கியமான பல அரசர்களைப்பற்றிப் படிக்க லாம்; மத சம்பந்தமான சரித்திரத்தைப் படிக்கலாம்; சமூக வாழ்க்கையில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காலக்கிரமமாகப் படிக்கலாம்; ஆனால், சமூக வாழ்க்கையின் வளர்ச்சியை ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு விளங்கும்படி போதிப் பது சுலபமான காரியமன்று.

கடைசியாக, சௌகரியத்தின் பொருட்டு பலவிதச் சரித்திர மென்று சொன்னோமே யொழிய, சரித்திர மென் பது ஒரே வகைதான் என்பதும், அது பூமியில் மனிதனின் வளர்ச்சியைத் தவிர வேறல்ல என்பதும் நினைவிருக்க வேண்டும்.

---

3. கல்வி இலாக்காப் பாடத் திட்டம்

5. பாடத்திட்டம் : சரித்திர சம்பந்தமாக ஆரம்பப் பாட சாலைகளுக்கு (ஐந்தாவது வகுப்பு வரை) பின்வரும் பாடத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

III. வகுப்பு

I. இராமாயண, மகாபாரதக் கதைகள்
II. அரிச்சந்திரன்
III. சிபிச் சக்கரவர்த்தி
IV. புத்தர்
V. அசோகர்
VI. இராணி சம்யுக்தை
VII. பத்மினி ராணி (சித்தூர்)
VIII. பாபரும் அவர் மகனின் வியாதியும்

IX. நூர்ஜஹான்
X. நாம் வசிக்கும் பிரதேசத்தில் நடந்த சம்பவங்கள் (கதை மூலமாக)
XI. சரித்திரத்தில் பெயர் பெற்றவர்களின் சரித்திரம்
(உ-ம்.) (1) சௌந்தர பாண்டியர்
(2) திருமலை நாயக்கர்
(3) இராணி மங்கம்மாள்
(4) ராஜராஜ சோழர்
(5) ராஜேந்திர சோழர்
(6) குலோத்துங்க சோழர்
(7) சேரன் செங்குட்டுவர்
(8) புகழேந்திப் புலவர்
(9) நரசிம்மவர்ம பல்லவர்

IV. வகுப்பு

I. நமது தேசம்
II. அலெக்ஸாண்டரும், போரஸும்
III. மஹா அசோகர்
IV. கி. மு ; கி. பி. பதவிவரணை
V. மேன்மையான குப்தர் காலம், விக்கிரமாதித்தியரும் நவரத்தினங்களும்
VI. ஹர்ஷ வர்த்தனரும் அவரது சாம்ராஜ்யமும்
VII. முகம்மது நபி
VIII. பல்லவர்கள்; மஹாபலிபுரம் ஏற்பட்ட வரலாறு
IX. இராஜபுத்திரர்கள் ; அவர்கள் குணதிசயங்கள்.
X. முகம்மதியர் படையெடுப்பு
XI. கிருஷ்ணதேவ ராயர்
XII. அக்பர்
XIII. ஷாஜஹானும், தாஜ்மஹாலும்
XIV. ராபர்ட் கிளைவ்

XV. விக்டோரியா மகாராணி
XVI. நாம் வசிக்கும் பிரதேசத்தில் நடந்த முக்கியமான சம்பவங்கள்

V. வகுப்பு

I. திராவிடர்; ஆரியர்; வேதகாலம்
II. பௌத்த மதம் பரவியவிதம்
III. கிரேக்கர் படையெடுப்பும் அதனால் ஏற்பட்ட பலன்களும்
IV. சந்திரகுப்த மௌரியரும் சாணக்கியரும்
V. மௌரிய சாம்ராஜ்யம்; அரசியல்; சிலாசாஸனங்கள் (கல்வெட்டுகள்)
VI. பல்லவர்கள், சேரர், சோழர், பாண்டியர்; அவர்கள் முன்னேற்றம்
VII. சந்திரகுப்தர்
VIII. முகம்மதியர் படையெடுப்பு—கஜினி, கோரி
IX. மூன்று மதாச்சாரியர்கள்
X. விஜயநகர ராஜ்யம்
XI. மொகலாய சாம்ராஜ்யத்தின் ஏற்றமும் அழிவும்; பாபர், அக்பர், ஔரங்கசீப்
XII. முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள்
XIII. மஹாராஷ்டிரரும், சிவாஜியும்
XIV. ராபர்ட் கிளைவ்; வாரன்ஹேஸ்டிங்ஸ்—இந்தியாவில் ஆங்கில அதிகாரத்தின் ஆரம்பம்
XV. ஹைதர் அலியும், திப்பு சுல்தானும்
XVI. வெல்லஸ்லி பிரபு
XVII. பெண்டிங் பிரபுவும், ராஜா ராம் மோஹனராயும்
XVIII. விக்டோரியா மகாராணியின் பேரறிவிப்பு, ரிப்பன் பிரபு, கர்ஸன் பிரபு, மிண்டோ பிரபு முதலிய வைசிராய்களின் காலத்தில் ஏற்பட்ட துரைத்தனச் சீர்திருத்தங்கள்.

சரித்திரம் போதிப்பதில் விஷயங்களைத் தெரிந்தெடுக்கும்போது இரண்டு முறைகளை அனுசரிப்பதுண்டு.

(1) ஒவ்வொரு வருஷமும் சரித்திரம் முழுவதும் போதிப்பது; ஆனல், வருஷத்திற்கு வருஷம் அதையே விவரித்துப் போதிப்பது. இது திருகல் முறை எனப்படும். இதற்கு ஆங்கிலத்தில் Concentric Plan என்று சொல்வார்கள்.

(2) சரித்திரத்தைக் காலக்கிரமப்படி பல பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு வருஷத்திலும் ஒரு பாகத்தைப் போதிப்பதுண்டு. இது காலமுறை எனப்படும். இதற்கு ஆங்கிலத்தில் Periodic Plan என்று பெயர்.

கல்வி இலாக்காப் பாடத் திட்டம் முதலில் சொல்லிய முறையை அனுசரித்து ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையிலும் சில நன்மைகளும் சில தீமைகளும் இருக்கின்றன. ஆதலால், கீழ் வகுப்புக்களில் திருகல்முறை திட்டத்தையும், மேல் வகுப்புக்களில் காலமுறை திட்டத்தையும் அனுசரிப்பது நலமென்று தோன்றுகிறது.

கல்வி இலாக்காப் பாடத் திட்டம் நமது தேசத்தின் சரித்திரத்தைப் பற்றியே இருக்கின்றது. ஆயினும், சரித்திரம் ஆரம்பிக்கும்போது பண்டைக் காலத்தில் நமது தேசத்தில் வசித்து வந்த மக்களது வாழ்க்கையைப்பற்றிச் சற்று விவரிக்க வேண்டும். ஏனெனில், சிறு பிள்ளைகள் அதிக சிக்கலில்லாத அவர்களது வாழ்க்கையைப் பற்றித் தெளிவுற, சுலபமாகத் தெரிந்து கொள்வார்கள். அவர்களைப் போல நடிக்கவும், அவர்கள் வசித்துவந்த வீடுகள், உபயோகித்து வந்த ஆயுதங்கள் முதலியவற்றைப் போல மாதிரிகள் செய்யவும் அப்பிள்ளைகளுக்கு அவகாசம் ஏற்படும்.

ஆதலால் முதலில் பழைய கற்கால மனிதர்களைப்பற்றிப் போதிக்க வேண்டும்.

பிறகு எகிப்து, சீன, ஈராக் முதலிய இடங்களில் வளர்ந்தோங்கி வந்த பண்டைக் காலத்து நாகரிகங்களைப் பற்றிப் படிக்க வேண்டும். பண்டைக் காலத்தில் நாகரிகம் ஏன் நதிப் பிரதேசங்களில் அபிவிருத்தியடைய வேண்டும்? பண்டைக் காலத்து நாகரிகங்களைப் பற்றிப் படிக்கும் போது சிந்து சமவெளியில் முற்காலத்தில் செழித்தோங்கிய நாகரிகத்தைப்பற்றிப் படித்துவிட்டுத் தேச சரித்திரத்தைப் படிக்கவேண்டும். இம்மாதிரி படித்தல் ஐந்தாம் வகுப்பில் தான் முடியும்.

6. பிரதேச சரித்திரம் : சமயம் வந்தபோது நாமிருக்கும் இடத்தின் சரித்திரத்தைப் படிக்க வேண்டும். ஆனல், பூகோளத்தில் செய்வது போல, நாமிருக்கும் இடத்தி லிருந்து இதர பாகங்களின் சரித்திரத்தைக் கிரமமாகப் படித்தல் என்பது முடியாத காரியம். இதற்கு இரண்டு காரணங்களுண்டு. (1) அம்மாதிரி படிப்பதற்குப் போது மான ஆதாரங்களில்லை. (2) சரித்திரத்திற்கென்று கொடுக் கப்பட்ட காலத்தில் நாமிருக்குமிடத்தின் சரித்திரத்தை விவரமாகப் படித்தல் என்பது முடியாத காரியம்.

4. போதிக்கும் முறைகள்

7. கதைமுறை: ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சரித்திரம் போதிக்க வேண்டியது கதைகள் மூலமாகத்தான் என்று முன்னமே சொல்லி யிருக்கிறோம். சுவையுடன் கதைகள் சொல்லுவதென்பது சுலபமானதன்று. முற்காலத்தில் நமது வீட்டிலிருந்த பாட்டிமார்களும், பாட்டன்மார்களும் கதைகள் சொல்வதில் மிகவும் திறமையுள்ளவர்களா யிருந்தார்கள். இப்பொழுதும் அம்மாதிரி வயது முதிர்ந்தவர்களைக் குழந்தைகள் சூழ்ந்துகொண்டு "கதை சொல்லுங்கள் தாத்தா" என்று தொந்தரவு செய்வதை நாம் பார்த்திருக்கிறோம்.

அம்மாதிரியான திறமை நம்மிடத்தில் குறைந்து கொண்டு வருகிறதென்றே சொல்ல வேண்டும். கதை சொல்லும் திறமை ஒருவருடன் கூடப்பிறந்ததென்று சொன்னபோதிலும், அத்திறமையைச் சம்பாதித்தலும் கூடும்.

முதலாவதாக, நாம் சொல்லுங் கதைகளில் நமக்கே பிரிய மிருக்க வேண்டும். நமக்குப் பிரியமில்லாத விஷயங்களில் பிறருக்குப் பிரிய மேற்படும்படி செய்வதெப்படி? இரண்டாவதாக நாம் சொல்லுங் கதை சம்பந்தமான விஷயங்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். கதை சொல்லுகிறவர்கள் அடிக்கடி கதை சொல்லும்போது புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதென்பது முடியாதகாரியம். அப்படிச் செய்தால் கேட்பவர்களின் ஊக்கம் குறைந்து

விடும். மூன்றாவதாக, கதை சொல்கிறவர்களுக்கு முற்காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களைத் தம் மனக் கண்களால் பார்க்கக் கூடிய சக்தி வேண்டும். இதற்குத்தான் ஆங்கிலத்தில் Imagination பாவனா சக்தி என்று சொல்லுவார்கள். அடுத்தபடி, பேசுவதில் தக்க திறமை யிருக்க வேண்டும். பேசும் நடை, வகுப்பிலுள்ள பிள்ளைகள் தெளிவுற அறியும்படி இருக்கவேண்டும். அப்பொழுதுதான், பிள்ளைகளுக்குக் கதைகள் கேட்பதில் ஊக்கமிருக்கும். தவிரவும், தடையின்றிப் பேசக் கூடிய திறமை வேண்டும்; விட்டு விட்டுப் பேசினால் பிரயோஜனமில்லை. பேசும்போது, சொல்லும் சம்பவங்கள் கேட்பவர்களின் கண்களுக் கெதிரில் நடப்பன போலத் தோன்றும்படி அவ்வளவு அழகாகக் கதைகள் சொல்ல வேண்டும்.

இம்மாதிரி, உணர்ச்சிதோன்றக் கதை சொல்பவர்கள் அனுசரிக்க வேண்டிய முறைகள் பல. நாம் பேசும்போது நம்முடைய குரலில், ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் கேட்பவர்களின் கவனத்தை அதிகரிக்கச்செய்யும். அபிநயத்தாலும் அவர்கள் கவனத்தை அதிகப்படுத்தலாம். அது மாத்திரம் போதாது. இடையிடையே, சில பாகங்களைத் திருப்பிச் சொல்ல வேண்டும். சரித்திரக் கதைகள் சொல்லுவதில், நமது நோக்கம், சரித்திர சம்பந்தமான விஷயங்கள் பிள்ளைகள் கற்கவேண்டியவை யாதலால், கதைகள் சம்பந்தமாகக் கேள்விகள் அடிக்கடி கேட்கவேண்டும்.

8. கேள்விகளின் வகைகள் : சரித்திர பாடத்தில் கேள்விகள் மூன்று சந்தர்ப்பங்களில் கேட்கலாம். அதாவது, பாட ஆரம்பத்தில், மத்தியில், கடைசியில். இம் மூன்று சந்தர்ப்பங்களில் கேள்விகள் கேட்பதில் மூன்றுவித நோக்கங்

களுண்டு. ஆரம்பத்தில் கேள்விகள் கேட்பதன் நோக்கம் இருவகைப்படும். தான் போதிக்கப்போகும் பாடத்தில் பிள்ளைகளுக்கு எவ்வளவு தெரிந்திருக்கிறதென்பதை அறியக் கேள்விகள் கேட்கலாம். இரண்டாவதாக, தான் போதிக்கும் பாடத்திற்குப் பிள்ளைகளின் மனங்களைத் தயாரிப்பதற்குக் கேள்விகள் கேட்கலாம். பாடத்தின் மத்தியில் கேள்விகள் கேட்பதன் நோக்கம் என்னவெனில் போதிக்கும் பாடத்தைப் பிள்ளைகள் கவனத்துடன் அறிந்திருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத் தான். பாடத்தின் இறுதியில், பாடத்திலுள்ள முக்கியமான விஷயங்களைக் கிரகித்திருக்கிறார்களா என்பதை அறியக் கேள்விகள் கேட்கலாம்.

9. **கேள்விகள் எப்படி இருக்கவேண்டும்?** (1) கேள்விகள் பிள்ளைகளை யோசிக்கும்படி செய்யவேண்டும். (2) ஆம், இல்லை, யென்னும் இருவார்த்தைகளை விடையாகக் கொண்டதா யிருத்தலாகா. அவ்வாறிருந்தால் யோசனையின்றி விடைகள் அளிப்பதாயிருக்கும். (3) கடைசி வார்த்தைகள் மாத்திரம் விடைகளாகக் கொடுக்கக் கூடிய கேள்விகள் கேட்கக் கூடாது. (4) வகுப்பிலுள்ள பிள்ளைகள் எல்லோரையும் கேள்விகள் கேட்கவேண்டும். சிலரை மாத்திரம் எப்போதும் கேட்பதும், மற்றும் சிலரை எப்போதும் கேட்காமல் இருப்பதும் கூடாது. (5) முதலில் கேள்வியை வகுப்பில் பொதுவாகக் கேட்டுப் பிறகு ஒரு பையனை விடையளிக்கும்படி செய்யவேண்டும். (6) ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடைதானிருக்கவேண்டும். கேள்விகள் தெளிவாயிருக்கவேண்டும்; சந்தேகத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது.

10. பலவகைக் கதைகள் : சரித்திர சம்பந்தமான கதைகள் பலவகைப்படும். சில கதைகள் உண்மையானவை. ஹர்ஷ சக்கரவர்த்தி தம்முடைய சகோதரியான ராஜ்ய ஸ்ரீயை விந்தியமலைக் காட்டில் தீக்கிரையாகாமல் காப்பாற்றியது உண்மையானது. மற்றும் பல கதைகள் வதந்திகள் (Legends) ஆகும். இவற்றிலிருந்து சரித்திர சம்பந்தமான விஷயங்களை எடுத்துக் கொள்ளலாம். மற்றும் சில பூர்வீகக் கட்டுக்கதைகளும் உண்டு. உதாரணமாகக் கிரகணங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் கதையைக் கொள்ளலாம். பண்டைக் காலத்தில், ஜனங்கள் இயற்கையில் ஏற்படும் சம்பவங்களுக்குத் தங்கள் மனோபாவப்படி காரணங்கள் கூறிவந்தார்கள். இம்மாதிரியான கதைகள் எல்லாத் தேசங்களிலுமுண்டு. நம்முடைய தேசத்தில் மட்டுந்தான் உண்டென்று நினைக்கவேண்டியதில்லை.

இம் மூன்றுவிதமான கதைகளுக்குள் உண்மையான கதைகள்தான் சரித்திரத்தில் முக்கியமானவை. ஆயினும், கல்வி இலாக்காப் பாடத் திட்டத்தில் மூன்றும் வகுப்புக்குக் கொடுத்திருக்கும் கதைகளில் சில வதந்திகளே. ஆரம்பத்தில் உண்மைக்கும் உண்மையில்லாத விஷயங்களுக்கும் பிள்ளைகளுக்கு வித்தியாசம் தெரியாதாகையால், இம்மாதிரி சேர்க்கப்பட்டிருக்கின்றன போலும். நம்முடைய தேசத்தின் பண்டைக்காலப் பெருமையை எடுத்துக் காட்டுவதற்காகவே இம்மாதிரிக் கதைகள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன என்று நினைக்கவேண்டி யிருக்கின்றது.

சரித்திர சம்பவங்களை வகுப்புவாரியாகப் பிரித்தலில் இரண்டு ஆதாரங்களை முக்கியமாகக் கொள்ளலாம். அவை இடம், காலம் என்பவை. ஒவ்வொரு தேசத்தில் நடந்த

சம்பவங்களைத் தனியாகச் சேர்க்கலாம். நம்முடைய கல்வி இலாக்காத் திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள் நம்முடைய தேசத்தில் ஏற்பட்டவை. மற்றொரு முறையை காலக்கிரமப்படி பிரிப்பது. இதை யொட்டி நம்முடைய பாடத் திட்டத்தில் குறிக்கப்பட்டிருப்பவையும் காலக்கிரமப் படி ஒழுங்கு படுத்தப்பட்டு இருக்கின்றன.

---

5. காலக்கிரமம்

11. வட இந்தியாவும், தென் இந்தியாவும் : கல்வி இலாக்காப் பாடத் திட்டத்தில் கொடுத்திருக்கும் விஷயங்களை இடத்தை ஆதாரமாகக் கொண்டு, வட இந்தியாவைப் பற்றிய சம்பவங்கள், தமிழ் நாட்டை யொட்டிய சம்பவங்கள் என்று பிரிக்கவேண்டும். பிறகு, காலக்கிரமப்படி வரிசைப் படுத்த வேண்டும். அநேகமாக எல்லாச் சரித்திரப் புத்தகங்களிலும் வட இந்தியாவில் நடந்த சம்பவங்களைப் பற்றியே விவரங்கள் அதிகமாகக் கொடுக்கப்பட் டிருக்கின்றனவே யொழிய, தென்னிந்தியாவைப் பற்றி அவ்வளவு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. இதற்குக் காரணமாகத் தென்னிந்தியாவின் சரித்திரம் நன்கு வரையறுக்கப் படவில்லை யென்று சொல்வதுண்டு. ஆயினும், முக்கியமான சம்பவங்களைப் பற்றிப் பேசும்போது, அப்பொழுது தென்னிந்தியாவின் நிலைமை எப்படி இருந்தது என்பதை விவரமாகக் கூறவேண்டும். அப்போதுதான், பிள்ளைகளுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும் உணர்ச்சி ஏற்படும்.

12. காலக்கிரம முறை: காலக் கிரமப்படி சரித்திரம் படிப்பது என்பது எப்படி? கீழுள்ள விஷயங்கள் காலக் கிரமப்படி எழுதப்பட்டிருக்கின்றன:

1. பழைய கற்கால மனிதர்கள்—ஏறக்குறைய 20,000 வருஷங்களுக்கு முன்
2. புதிய கற்கால மனிதர்கள் —ஏறக்குறைய 15,000 வருஷங்களுக்கு முன்
3. சிந்து சமவெளி நாகரிகம் —கி. மு. 3,000
4. ஆரியர் வருகை — „ 2,000
5. வட இந்தியாவில் பல ராஜ்யங்கள் — „ 1,000
6. மகத ராஜ்ய முன்னேற்றம்—கி. மு. 7-ஆம் நூற்றாண்டு
7. பௌத்த மதம், சமண மதம்—கி. மு. 6-ஆம் நூற்றாண்டு
8. மௌரியர்—சந்திரகுப்தர் —கி. மு. 322

மேற்கூறிய விஷயங்கள் காலக் கிரமப்படி வரிசையாக எழுதப்பட் டிருக்கின்றன. கொடுத்திருக்கும் வருஷங்களெல்லாம், மேற்கூறிய சம்பவங்கள் ஏற்பட்ட காலத்தைக் குறிக்கின்றன. கடைசியாகக் கொடுத்திருக்கும் வருஷம், இப்பொழுது நடைபெறும் வருஷத்திற்கு 2265 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவத்தைக் குறிக்கும். அதாவது, நம்முடைய காலத்திற்கும், சந்திரகுப்த மௌரியர் பட்டத்திற்கு வந்த காலத்திற்குமுள்ள தூரத்தை அவை குறிக்கின்றன. அம்மாதிரியே, ஆரியர்கள் கி. மு. 2000 வருஷம் முதல் கி. மு. 1400 வருஷம் வரையில் கூட்டம் கூட்டமாக இந்தியாவுக்கு வந்துகொண்டே இருந்தார்கள். ஆதலால், ஆரியர் இந்தியாவுக்கு வந்த நிகழ்ச்சிகள் 600 வருஷங்கள் வரையில் பரவியிருந்தன.

காலக்கிரம சம்மந்தமாக மூன்று விஷயங்கள் கவனிக்க வேண்டுமென்று சரித்திர போதனமுறை நூலாசிரியர் வி. டி. காதே (V. D. Ghate) கூறுகிறார். அவை மேற் சொல்லப்பட்ட சரித்திர சம்பவமேற்பட்ட காலம், நம் முடைய காலத்திற்கும் அச்சம்பவம் ஏற்பட்ட காலத்திற்கும் உள்ள காலத்தில் வித்தியாசம், அச்சம்பவம் பரவியிருந்த காலம் முதலியவைதான் (Location, distance, duration). இவற்றில், முதலில் சொல்லப்பட்டிருப்பது அவ்வளவு முக் கியமானதல்ல. பின் கூறப்பட்டிருக்கும் இரண்டுமே முக் கியமானவை.

சரித்திரத்தைக் காலக்கிரமப்படி பிள்ளைகளுக்குப் போதிப்பது எவ்விதம்? தற்கால மனிதர் காலத்திற்கும் மௌரியர் காலத்திற்கும் காலக்கிரமத்தில் பிள்ளைகள் வித் தியாசத்தை எப்படி அறிவார்கள்? இதற்குப் பல உபகர ணங்களை உபாத்தியாயர் உபயோகிக்கவேண்டும். காலக் கிரம உணர்ச்சி பிள்ளைகளுக்கு ஒன்பதாவது வயதில்தான் ஏற்படுகின்றதென்று தத்துவ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஆதலால் மூன்றாவது வகுப்பில் சரித்திரம் போதித்தல் ஏற்றதாகும். ஆரம்பத்தில், பிள்ளைகள் முதல் நாள் நடந்த சம்பவங்களையும் மறுநாள் நடந்த சம்பவங்களையும் ஒன்றோ டொன்று சம்பந்தப்படுத்த வேண்டும். பிறகு, பிள்ளைகள் எத்தனை வருஷங்களுக்கு முன்னர் பள்ளிக்கூடத்தில் வந்து சேர்ந்தார்கள்; எத்தனை வருஷங்களுக்குமுன் பிறந்தார் கள்? நமது மன்னர் பட்டத்திற்கு வந்தது எத்தனை வரு ஷங்களுக்குமுன்? என்ற இம்மாதிரிக் கேள்விகள் மூலம் காலக்கிரமத்தின் நீடிப்பைப் பிள்ளைகள் அறியும்படி செய்ய வேண்டும். இவ்விதமாகவே, தகுந்த உதாரணங்கள் மூலம்

சம்பவங்கள் நிகழ்ந்த காலத்தைப்பற்றிய உணர்ச்சி சரிவரப் பிள்ளைகளுக்கு ஏற்படும்படி செய்யவேண்டும். இது சரித்திரத்தைக் காலக்கிரமமாக உணருவதற்கு அஸ்திவாரமாகும்.

13. காலக்கிரம உணர்ச்சி ஏற்படுவதற்கு வேண்டிய உதவிகளாவன :

(a) காலக் கோடுகள்

இந்து தேச சரித்திரம் அடுத்த பக்கத்தில் கொடுத்திருக்கும் காலக் கோட்டினால் விளக்கப்படுகின்றது.

காலக் கோடுகள் வரையும்பொழுது பின்வரும் விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

(1) காலக் கோடுகள் ஒரே அளவிலிருக்க வேண்டும். (Uniform scale)

(2) முக்கியமான சம்பவங்களை அச்செழுத்துக்களில் குறிக்க வேண்டும்.

(3) வெவ்வேறு பாகங்களுக்கு (இந்து, முஸ்லிம், பிரிட்டிஷ் காலங்கள்) வெவ்வேறு வர்ணம் உபயோகிக்க வேண்டும்.

(4) சம்பவங்கள் அதிகமாக இருக்கக் கூடாது.

(b) கோட்டுப் படங்கள் (Graphs)

இவை சரித்திரத்தில் சில விஷயங்களைக் காலக்கிரமப்படி நன்குணரப் பயன்படும். உதாரணமாக பௌத்த மதத்தின் வளர்ச்சி, அழிவு; மொகலாயரின் ஏற்றம், அழிவு முதலியவற்றை கோட்டுப் படங்கள் மூலம் விளக்கலாம். 22-ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் கோட்டுப் படம் பௌத்த மதத்தைக் குறிக்கின்றது. புத்தர் காலம் முதல் ஹர்ஷர் காலம் வரையில் பரவி யிருக்கிறது.

காலக்கோடு

வட இந்தியா

ஸ்கேல்-1அங்.= 200 வருஷங்கள்



குறிப்பு: இதைப்போல் தென் இந்தியாவுக்கும் காலக்கோடு வரைந்து கொள்ளவும்.

(c) வருஷக் கார்டுகள் (Date Cards)

ஒரு நூற்றாண்டில் நடந்த சம்பவங்களைக் காலக்கிரமப்படி ஞாபகம் வைத்துக்கொள்ள இவை உபயோகப்படும். வருஷக் கார்டுகளில் சம்பவங்களை விளக்கத் தகுந்த சித்திரங்களை அமைக்கலாம். உதாரணமாகச் சண்டை என்று காண்பிக்க இரண்டு கத்திகளை × இம்மாதிரிப் போடலாம்.



பௌத்த மதத்தின் வளர்ச்சியையும் அழிவையும் குறிக்கும் கோட்டுப் படம்

இவைகளை மாட்டுவதற்கு ஒரு பலகை செய்து அதை நூறு சதுரங்களாகப் பிரித்து, ஒவ்வொரு சதுரத்திலும் ஒரு கார்டை மாட்டுவதற்கு ஒரு கொக்கியமைக்க வேண்டும். பாடம் ஆரம்பிப்பதற்கு முன் வேண்டிய கார்டுகளைப் பலகையில் மாட்டி வகுப்புக்குக் கொண்டு போகலாம். சதுரங்களடங்கிய பலகையின் பிளான் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(d) படங்கள் மூலம் காலக்கிரமத்தை விளக்குதல்—(Picture charts)

காலக் கோடுகள் போட்டு அவற்றின் பக்கத்திலேயே தகுதியான படங்களை வரைந்து வைக்கலாம். உதாரண



வருஷக் கார்டுகள் மாட்டும் பலகையின் பிளான்

மாக அலெக்ஸாண்டர் படையெடுத்த வருஷமான கி. மு. 326-க்கு எதிரில் அலெக்ஸாண்டர் படமொன்று வரைந்து

வைக்கலாம். சிறு பிள்ளைகள் வருஷங்களை ஞாபகம் வைத்துக் கொள்வதற்கு இது ஒரு உதவியாகும்.

ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய வருஷங்கள் அதிகமாக இருக்கக் கூடாதென்று முன்னமேயே சொன்னேம். மற்றும், ஒவ்வொரு முக்கியமான சம்பவத்தைப் பற்றிப் பேசும்பொழுதும், இந்தியாவின் நிலைமை அப்பொழுது எப்படி யிருந்தது என்பதைப்பற்றித் தெளிவாகப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். கி. மு. 273 அசோகர் பட்டத்திற்கு வந்த வருஷம். அக்காலம் எப்படிப்பட்டது ? பல ராஜ்யங்களாகப் பிரிந்திருந்து, பிறகு சந்திரகுப்தரால் ஒரே அரசரின் ஆட்சியில் வட இந்தியா முழுவதும் கொண்டுவரப்பட்டது. வல்லரசர்களான பிந்துசாரராலோ சந்திரகுப்தராலோ தக்ஷிணத்தில் சில பாகங்கள் ஜயிக்கப் பட்டிருந்தன. கிழக்குக் கடற்கரையோரத்திலிருந்த கலிங்கத்தை மாத்திரம் ஜயித்துவிட்டால் மௌரிய ராஜ்யம் தக்ஷிணத்தில் கடலுக்குக் கடல் பரவியிருக்கும். அக்காலத்தில் அரசர்கள் தங்கள் ராஜ்யத்தைப் பெருக்குவதிலேயே நோக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். ஆதலால் அசோகர் கலிங்கப்போரை ஆரம்பித்தார். கலிங்கர்கள் மும்முரமாக யுத்தம் செய்தனர். ஆயினும் தோல்வியடைந்தனர். ஆனல் உயிர்ச் சேதமோ மிகவும் அதிகம். ஒரு லக்ஷம் ஜனங்கள் மாண்டார்கள். இதனல் அசோகருக்கு மனவேதனையுண்டாயிற்று ; சண்டை செய்வதை நிறுத்தினர் ; அமைதியைப் பெறுக்கினர். ‘ அஹிம்ஸை ’யை முக்கியமான கொள்கையாகக் கைக்கொண்ட புத்த மதத்தைத் தழுவினர் ; உலகமெங்கும் ராஜரிஷி என்று பெயரெடுத்தார். அப்படிப்பட்ட அசோகர் பட்டத்திற்கு வந்த வருஷம் கி. மு. 273.

அதாவது, 2215 வருஷங்களுக்கு முன் இச்சம்பவம் ஏற்பட்டது.

14. முக்கியமான வருஷங்கள் : ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய வருஷங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

III. வகுப்பு

கி. மு.

622. புத்தர் பிறந்தார்.
273. அசோகர் பட்டத்திற்கு வந்தார்.

கி. பி.

1175. பிருதிவி ராஜன் ராணி சம்யுக்தையை மணந்தார்.
1303. அலாவுதீன் கில்ஜி சித்தூரைப் பிடித்தார் (பத்மினி சரித்திரம்)
1526. பாபர் டெல்லியில் சக்கரவர்த்தியானார்.
1611. ஜஹாங்கீர் நூர்ஜஹானை மணந்தார்.

IV. வகுப்பு

மூன்றும் வகுப்பில் கொடுத்திருக்கும் வருஷங்களோடு, கீழ் வருபவைகளையும் சேர்த்துப் படிக்கவும். இம்மாதிரியே ஐந்தாவது வகுப்புக்கும்.

கி. மு.

326. அலெக்ஸாண்டர் புருஷோத்மரைத் தோற்கடித்தார்.
273 - 233. அசோகர் அரசாட்சி

கி. பி.

380 - 414. இரண்டாவது சந்திரகுப்த விக்ரமாதித்யர்
606 - 647. ஹர்ஷர் அரிசாட்சி
622. முகம்மது நபி மக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்றார் (ஹிஜிரா).

630 - 638.	நரசிம்மவர்ம பல்லவர்
650 - 1200.	ராஜபுத்திர ராஜ்யங்கள்
999.	கஜினி முகம்மது இந்தியாவின்மீது எடுத்த முதல் படையெழுச்சி.
1509 - 1529.	கிருஷ்ண தேவராயர் அரசாட்சி
1556 - 1605.	அக்பர் அரசாட்சி
1632.	தாஜ்மஹால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.
1751.	கிளைவினால் ஆற்காடு பிடிக்கப்பட்டது.
1858.	மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மகா ராணியார் இந்தியா சக்கரவர்த்தினி என்று பிரசுரம் செய்யப்பட்டது.

V. வகுப்பு

கி. மு.	
2000 - 1400.	ஆரியர் இந்தியாவுக்கு வந்த காலம்
322.	சந்திரகுப்த மௌரியர் பட்டத்துக்கு வந்தார்.
கி. பி.	
320.	சந்திரகுப்தர் (குப்த வமிசம்) பட்டத்திற்கு வந்தார்.
985 - 1014.	ராஜ ராஜ சோழர் அரசாட்சி
1206.	டெல்லியில் முகம்மதிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது.
1498.	வாஸ்கோட காமா கள்ளிக்கோட்டைக்கு வந்தார்.
1639.	ஆங்கிலேயரால் சென்னை வாங்கப்பட்டது.
1658 - 1707.	ஔரங்கசீப்பின் அரசாட்சி.
1661.	பம்பாய் ஆங்கிலேயர் வசம் வந்தது.
1674.	சிவாஜியின் பட்டாபிஷேகம்.

1690.	கல்கத்தா பண்டகசாலை ஆரம்பம்
1774.	ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜனரல்
1798.	வெல்லெஸ்லி கவர்னர் ஜனரல்
1799.	திப்பு சுல்தான் இறந்தார்
1828 - 35.	பெண்டிங் பிரபு கவர்னர் ஜனரல்

குறிப்பு: *(1)* மேலே குறிக்கப்பட்ட சம்பவங்களின் காலத்திற்கும் தற்காலத்திற்குமுள்ள வித்தியாசத்தை அடிக்கடி வற்புறுத்த வேண்டும்.

(2) மேலே கொடுக்கப்பட்ட வருஷங்கள் மூன்று வகுப்புகளுக்கும் அவசியமானவை. உபாத்தியாயர் தம் அனுபவத்திற்குத் தக்கவாறு வேறு முக்கியமான வருஷங்களைச் சேர்க்கலாம்.

---

6. உபகரணங்கள்

15. தேசப் படங்கள் : சரித்திரம் போதிப்பதற்கு வேண்டிய தேசப் படங்கள் அவசியம். அந்தந்தப் பாடங்களுக்குத் தக்கவாறு உபாத்தியாயர் படங்களைத் தயாரிக்க வேண்டும். ஒரு படத்திலும் அதிகமான விவரங்கள் இருக்கலாகாது. ஐந்தாம் வகுப்புக்கு வேண்டிய படங்கள் ஜாபிதா கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் மௌரிய ராஜ்யத்தைக் குறிக்கும் மாதிரிப் படம் 92-ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

படங்களின் ஜாபிதா

1.	இந்தியா	—ஆரியர் : வேத காலம்
2.	,,	—புத்தர், சமணர் காலம்
3.	யூரேஷியாவின் தென் பாகம்	—அலெக்ஸான்டர் படையெடுப்பு
4.	இந்தியா	—மௌரிய ராஜ்யம்

5.	தென்னிந்தியா	—தமிழகம்
6.	,,	—விஜய நகர ராஜ்யம்
7.	இந்தியா	—அக்பர் ராஜ்யம்
8.	,,	—ஔரங்கசீப் ராஜ்யம்
9.	இந்தியா	—ஐரோப்பியர்—பண்டகசாலைகள்
10.	,,	—சிவாஜி, மஹா ராஷ்டிர ராஜ்யங்கள்
11.	தென்னிந்தியா	—கர்னுடக யுத்தங்கள் (கிளைவ் காலம்)
12.	இந்தியா	—வாரன் ஹேஸ்டிங்ஸ்
13.	தென் இந்தியா	—மைஸூர் யுத்தங்கள்
14.	இந்தியா	—வெல்லெஸ்லி பிரபு
15.	தற்கால இந்தியா	

16. சித்திரப் படங்கள்: இப்படங்கள் எந்தக் காலத்தைக் குறிக்கின்றனவோ, அந்தக் காலத்தைப் பற்றிய நினைவை நமக்கு அதிகப் படுத்துகின்றன. ஆனல் சித்திரப் படங்கள், மொகலாயர் காலத்திலிருந்துதான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அதற்கு முற்பட்ட காலத்தவரின் உருவச் சிலைகளின் படங்கள்தான் கிடைக்கின்றன. இப் படங்களைச் சித்திரங்களுடன் கூடிய சமாசாரப் பத்திரிகைகளிலிருந்து உபாத்தியாயர் சேகரித்து, வரிசைக் கிரமமாக வகுத்து வைக்கவேண்டும். பெரிய காகிதங்களில் இச் சித்திரங்களைப் பெரிதாக வரைந்து வைத்துக் கொள்ளலாம்.

17. உருவங்கள்: பழைய கட்டடங்களின் உருவங்கள், சண்டை நடந்த இடங்களின் மாதிரிகள், பண்டைக் காலத்து ஆயுதங்கள், கவசங்கள் ஆகியவற்றின் மாதிரிகள் முதலியவற்றைச் செய்து காண்பித்தால் பிள்ளைகளுக்குப் பாடத்தில் அதிகமான ஊக்கமேற்படும்.

18. அநுபவத் தொடர்பு : சரித்திரத்தில் ஏற்பட்ட சம்ப வங்களைக் கூடியவரையில், குழந்தைகளின் அநுபவத்துடன் சம்பந்தப்படுத்தவேண்டிய அவசியத்தைப்பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். தற்காலத்தையும், பண்டைக் காலத் தையும் ஒப்பிட்டுப் பார்த்து உள்ள வேற்றுமைகளையும், ஒற்றுமைகளையும் தெரிந்துகொண்டால் பண்டைக் காலத் தைப் பற்றிப் பிள்ளைகளுக்குத் தெளிவான அபிப்பிராயம் ஏற்படும். இம்முறையை உபாத்தியாயர் அடிக்கடி கையாள வேண்டும்.

19. கரும்பலகை : பாடச் சுருக்கங்களும், ரேகைப் படங்களுக்கும் (Sketches) கரும்பலகையை உபயோகப் படுத்தலாம். முக்கியமான குறிப்புகளை வர்ணச்சாக்குக ளால் எழுத வேண்டும். பிள்ளைகள் கரும்பலகைக் குறிப்பு களைத் தங்கள் நோட்டுப் புத்தகங்களில் எழுதிக்கொள்ளும் படி செய்யலாம்.

---

7. உபகரணங்கள் (தொடர்ச்சி)

20. மூலாதாரங்களிலிருந்து சரித்திரம் படித்தல் : நாம் ஒரு சரித்திர புத்தகத்தை யெடுத்துப் படித்தோமேயானல், சம்ப வங்களெல்லாம் கோர்வையாக எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சரித்திர நூலாசிரியர்கள் இச் சம்பவங்களைக் கோர்வையாக எப்படி எழுதினர்கள்? ஆதிகாலம் முதல் சரித்திரம் இம்மாதிரி எழுதப்பட்டு வந்ததா? இல்லை. பல ஆதாரங்களை ஆராய்ச்சி செய்து சரித்திரத்தை எழுதியிருக் கிறார்கள். நமது தேச சரித்திர சம்பந்தமாகக் கிடைத்

திருக்கும் ஆதாரங்களில் சிலவற்றைக் கீழே குறித்திருக்கிறோம்.

(a) **பழைய கட்டடங்கள் முதலியவை:** இவற்றிலிருந்து ஒரு தேசத்தின் ஜனங்களின் நாகரிக வளர்ச்சியைத் தெரிந்து கொள்ளலாம். கி. மு. 3000 வருஷங்களுக்கு முற்பட்டகாலம் முதல் இந்தியர்களின் நாகரிகத்தைப்பற்றி இக்கட்டடங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளுகிறோம்.

(b) **கல்வெட்டுகள், உலோகவெட்டுகள், தாம்பிரப் பட்டையங்கள், பித்தளைப் பட்டையங்கள்:** இவை முக்கியமான ஆதாரங்கள். இவற்றின் மூலம் அசோகருக்குக் கலிங்கப் போரினலேற்பட்ட மன மாறுபாட்டை அறிகிறோம். இக்கல்வெட்டுகளால் சமுத்திர குப்தர், ராஜராஜ சோழர் முதலிய அரசர்களின் வெற்றிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுகிறோம்.

(c) **நாணயங்கள்:** இந்தியாவில் ஆண்ட சில அரச வமிசங்கள் இந்நாணயங்களின் மூலமாகத்தான் நமக்குத் தெரிந்திருக்கின்றன. உதாரணமாக, இந்து—கிரேக்க அரசர்களைப்பற்றி நாம் இந்நாணயங்களின் மூலமாகத்தான் தெரிந்து கொள்கிறோம். சமுத்திர குப்தர் நாணயமொன்றில் வீணை வாசிப்பதுபோல் உருவம் அமைக்கப்பட்டிருப்பதால் சமுத்திர குப்தர் சங்கீதத்திலும் திறமை யுள்ளவரென்று விளங்குகின்றது.

(d) **வதந்தி:** உதாரணமாக, இராமாயண பாரதக் கதைகளைக்கொள்ளலாம். இவை ஆரியர்களின் நாகரிகத்தை நன்கு விளக்குகின்றன. தவிரவும் இராமாயணம், ஆரியர் முதல் முதலில் தென்னிந்தியாவிற்கு வந்த சம்பவத்தைக் குறிக்

கின்றதென்றும், மஹா பாரதம், ஆரிய வகுப்புகளுக்குள் ஏற்பட்ட கடைசிச் சண்டையைக் குறிக்கின்றதென்றும் சில சரித்திராசியர்கள் கூறுகின்றார்கள்.

(e) **பண்டைக் காலத்துச் சரித்திராசிரியர்கள் :** நம்முடைய தேச சரித்திரத்திற்குப் பண்டைச்சரித்திர ஆதாரங்கள் அதிகமாக இல்லை. ஏனெனில், நம்முடைய நாட்டில் பண்டைக் காலத்தில் சரித்திராசிரியர்களில்லையென்றே சொல்லலாம். நம்முடைய நாட்டைப் பற்றிய குறிப்புகள் அன்னிய நாட்டுச் சரித்திராசிரியர்களிடமிருந்தே கிடைத்திருக்கின்றன. நமக்குத் தெரிந்தவரையில் காஷ்மீர சரித்திரமொன்று வடமொழியில் எழுதப்பட்டிருக்கிறது. முகம்மதியர் காலத்தில் இராஜ சபையில் சரித்திராசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் எழுதி வைத்திருக்கும் சரித்திரங்களை ஜாக்கிரதையாகப் படித்துத் தகுந்தவற்றை வேண்டும் அளவுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(f) **அன்னிய நாட்டார் நமது நாட்டைப் பற்றி எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் :** பண்டைக் காலம் முதல் தற்காலம் வரையில் இம்மாதிரியான குறிப்புகள் பல இருக்கின்றன. மௌரியர் காலம், குப்தர் காலம், ஹர்ஷர் காலம், முகம்மதியர் காலம் முதலியவற்றிற்கெல்லாம் இவ்வாதாரங்கள் நன்கு உதவுகின்றன.

இப்படிப்பட்ட பலவித ஆதாரங்களை ஆரம்பப் பாடசாலைகளில் உபாத்தியாயர் உபயோகிக்க முடியுமா? இது சம்பந்தமாக நாம் கவனிக்க வேண்டியதொன்று உண்டு. இவ்வாதாரங்களில் உபாத்தியாயர் உபயோகிக்க கூடியவை முற்காலத்தில் ஏற்பட்ட நூல்கள்தான். இதர ஆதாரங்களை

உபயோகிக்கப் போதுமான பயிற்சி ஆரம்பப் பாடசாலை ஆசிரியருக்குக் கிடையாது. சரித்திர சம்பந்தமாக உபயோகப்படக் கூடிய வேறு பாஷைகளில் எழுதப்பட்ட பல நூல்களும், சங்க நூல்களும், சாதாரணமாகப் படித்துப் பொருளைத் தெரிந்துகொள்ள முடியாதவை. உபாத்தியாயருக்குத் தமிழில் நல்ல பயிற்சிவேண்டும். அப்படிப் படித்துப்பொருளையறிந்துகொண்ட போதிலும், தமிழரசர்காலம் சங்க நூல்களிலிருந்து களங்கமின்றி வரையறுக்க முடியவில்லை. உபாத்தியாயர் நிலைமையே இவ்வாறிருக்க ஆரம்பப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் இவ்வாதாரங்களை எப்படி உபயோகிப்பது?

ஆதாரங்களை நன்கு உபயோகிக்கத் தெரிந்தால் சரித்திரத்தில் உண்மையை அறிய உபயோகமாயிருக்கும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆதாரங்களை உபயோகிப்பது அவ்வளவு சுலபமான காரியமென்று தோன்றவில்லை.

---

8. உபகரணங்கள் (தொடர்ச்சி)

21. பாடப் புத்தகங்கள்: சரித்திர சம்பந்தமாகப் பாடப் புத்தகங்கள் எந்த வகுப்பிலிருந்து வைப்பது? பாடத்திட்டப்படி சரித்திரம் மூன்றும் வகுப்பில் ஆரம்பிக்கிறோம். ஆனல், அந்த வகுப்புக்குச் சரித்திர பாடப் புத்தகங்களொன்றும் வேண்டுவதில்லை. உபாத்தியாயர் சரித்திரக் கதைகளைச் சுவையுடன் சொன்னல் போதுமானது. சரித்திரக் கதைகள் அடங்கிய நல்ல தமிழ் வாசக புத்தகத்தைப் பாட புத்தகமாக வைத்து விட்டால், சரித்திரத்திற்கும் அந்தப் புத்தகத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மூன்றும் வகுப்பில் பிள்ளைகளுக்கு நன்ருக வாசிக்கவும், எழுதவும்

பூரணமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கா தென்று தோன்று கிறது. நான்காம் வகுப்புமுதல் சரித்திரத்திற்காக என்று தனிப்பட்ட புத்தகங்கள் வைக்க வேண்டும்.

பாடப் புத்தகங்கள் எப்படி இருக்க வேண்டும்? அல்லது எப் படிப்பட்ட பாடப் புத்தகங்களை உபாத்தியாயர் தம்முடைய வகுப் புக்கு வைக்க வேண்டும்?: இவ்விரண்டு கேள்விகளுக்கும் பதில் ஒன்றே. பாடப் புத்தகங்கள் பிள்ளைகளின் உபயோகத் திற்கென்பதை உபாத்தியாயர் நன்குணரவேண்டும். பாடப் புத்தகங்களிலுள்ள விஷயங்களைவிட அதிகமாக வேறுபுத்த கங்களிலிருந்து தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அப் பொழுதுதான் தைரியத்துடன் பிள்ளைகளுக்குச்சரித்திரம் போதிக்க முடியும். பாடப் புத்தகங்கள் எப்படி யிருக்க வேண்டும் என்பதை இப்பொழுது கவனிப்போம்.

(a) சிறு பிள்ளைகளுக்குச் சிறிய புத்தகமாக இருக்க வேண்டும் என்பதில்லை. சில முக்கியமான விஷயங்களை எடுத்துக் கொண்டு அவற்றை விவரமாக எழுதியிருக்கும் புத்தகங்களே பிள்ளைகளுக்குத் தகுதியானவை.

(b) **நடை:** பாஷை சுலபமாகவும் நன்ருகவும் எழுதி யிருக்கவேண்டும். பிள்ளைகளுக்குப் புத்தகம் வாசிப்பதில் ருசி ஏற்பட வேண்டும்.

(c) **அச்சு:** எழுத்துக்கள் பெரியவையாக இருக்கவேண் டும். வாசிப்பதில் பிள்ளைகள் கண்களுக்குச் சிரமம் ஏற்படக் கூடாது.

(d) **படங்களும், சித்திரங்களும்:** பாடப் புத்தகங்களில் இவை நிறைந்திருக்கவேண்டும். ஐந்தாம் வகுப்புக்கு வேண் டிய படங்கள் முன்பே (அத்தியாயம் 6) குறித்திருக்கிரேம். இந்தியாவின் படம் வரையும்போது தற்கால எல்லையும்

குறித்திருக்க வேண்டும். ஏனென்றால், அசோகர், அக்பர் முதலிய சக்கரவர்த்திகளின் சாம்ராஜ்யங்கள் இந்தியாவுக்கு வெளியிலும் பரவியிருந்தது என்பதை அப்படங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சித்திரங்களும் அம்மாதிரியே நன்றாக வரையப்பட்டிருக்க வேண்டும். தமிழ்ப் புத்தகங்களில் சாதாரணமாகப் படங்கள் நன்றாயிருப்பதில்லை. சித்திரங்கள், பண்டைக் காலக் கட்டடங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலியவற்றைக் குறிக்கலாம். சித்திரங்களைப் பார்ப்பதிலிருந்து பிள்ளைகளுக்குப் பாடத்தில் பிரியம் ஏற்பட வேண்டும்.

(e) எந்த விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதோ அது சம்பந்தமான விவரங்களைத் தொகுத்தெழுத வேண்டும். உதாரணமாக, நான்காம் வகுப்புக்கு எழுதும்போது விவரங்களைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்.

(i) அசோகர் கலிங்கப் போருக்குச் செல்லல்
(ii) அசோகரும் பௌத்த மதமும்
(iii) அசோகருடைய ராஜ்யமும், அரசியலும்

(iv) பண்டைகாலத்துச் சம்பவங்களைப்பற்றி எழுதும்போது, தற்கால நிலைமையுடன் அவற்றைச் சம்பந்தபடுத்த வேண்டும். மௌரியர் காலத்தில் ஜனங்களின் நிலைமையைத் தற்கால நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அப்போது தான் பிள்ளைகளுக்குப் பாடத்தில் ஊக்கமேற்படும்.

22. பாடப் புத்தகத்தை எப்படி உபயோகப்படுத்துவது ? : வகுப்பில் பிள்ளைகளை வரிசையாய் புத்தகத்தைப் படிக்கச் செய்து, உபாத்தியாயரும் படித்துப் பொருளை விளக்கிக் கொண்டு போவதென்பது சாரியான முறையில்லை. சரித்

திர சம்பந்தமான அறிவைப் பிள்ளைகள் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டியது உபாத்தியாயருடைய கடமை. புத்தகம் செய்யும் வேலை உபாத்தியாயர் செய்யும் வேலைக்கு அடுத்தபடியாகத்தான் இருக்கவேண்டும்.

ஆயினும், பாடப் புத்தகங்களைப் பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் உபயோகிக்கும்படி செய்யலாம். பாடம் ஆரம்பிப்பதற்கு முன்னால் பிள்ளைகளைப் புத்தகத்திலுள்ள பாட சம்பந்தமான சித்திரங்களையோ படங்களையோ கவனிக்கும்படி செய்யலாம். முதல் பத்தியைப் படித்து, எப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேள்விகள் மூலம் வருவிக்கலாம்.

பாடத்தின் மத்தியில், தான் சொல்வதற்குப் பதிலாக, புத்தகத்திலிருந்து வேண்டிய பாகங்களைப் பிள்ளைகளுக்குப் படித்துக்காட்டலாம்; பிள்ளைகளைப் படிக்கும்படியும் செய்யலாம்.

பாடம் முடிந்த பிறகும் பிள்ளைகளை மௌனமாகப் படிக்கச் செய்தோ வரிசையாகப் படிக்கச் செய்தோ முக்கியமான அமிசங்களைக் கேள்விகள் மூலம் வருவித்து கரும் பலகையிலோ நோட்டுப் புத்தகங்களிலோ பிள்ளைகள் எழுதிக் கொள்ளச் செய்யலாம்.

வீட்டு வேலையாகச் சில கேள்விகள் கொடுத்து அவைகளுக்கு விடைகள் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதும்படி செய்யலாம்.

ஆனால் அக்கேள்விகளுக்கு விடைகள் புத்தகத்திலுள்ள வாக்கியங்களை அப்படியே எடுத்து எழுதாமல்

பிள்ளைகள் தங்கள் சொந்த வாக்கியங்களை எழுதச் செய்ய வேண்டும்.

தவிர, பிள்ளைகளின் திறமைக்குத் தக்கவாறு, பாடப் புத்தகத்திலிருந்து எடுத்துச் செய்யக் கூடிய வேலைகளைக் கொடுக்கலாம். உதாரணமாக, காலக்கோடுகள், சித்திரங்கள், தேசப்படங்கள், கைவேலை, நடித்தல் முதலியவற்றைக் கொள்ளலாம். இவற்றில் சிலவற்றைப் பின்னல் சற்று விவரமாகக் கூறுவோம்.

9. இதர பாடங்களுடன் சம்பந்தப் படுத்துதல்

23. சரித்திரமும் மற்றப் பாடங்களும் : மனிதனுடைய அறிவு பொதுவாக இருக்கின்றதே யொழிய, தனித்தனிப் பாடங்களாக இல்லை. சௌகரியத்திற்காக இதுவரையில் மனிதனல் சேகரிக்கப்பட்ட அறிவுத் தொகுதியைப் பல பாகங்களாகப் பிரித்திருக்கிறோம். ஆதலால், கூடுமான வரையில் ஒவ்வொரு பாடத்தையும் இதர பாடங்களுடன் சம்பந்தப்படுத்திப் போதிக்க வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் அநேகமாக ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு உபாத்தியாயர்தான் இருப்பாராதலால், பல பாடங்களைச் சம்பந்தப்படுத்திப் போதிப்பதென்பது முடியாத காரியமல்ல.

24. தொடர்பு படுத்தக் கூடிய பாடங்கள் : சரித்திரத்தை எந்தப் பாடங்களுடன் சம்பந்தப்படுத்தலாம் என்று இப்பொழுது கவனிப்போம்.

(a) பூகோளம் : சரித்திரத்திற்கும் பூகோளத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. சில பூகோள ஆசிரியர்கள்

சரித்திர சம்பவங்களை யெல்லாம் பூகோளத்தினல் விளக்கி விடலாமென்று கூறுகின்றூர்கள். அப்படிச் சொல்வது அவ்வளவு சரியானதன்று. மனித வாழ்க்கையை இருவித மான சக்திகள் மாறுபாடடையச் செய்கின்றன. அவை: (1) மனிதனின் தீர்மானிக்கும் சக்தி, (2) மனிதனுக்குச் சுற்றிலுமுள்ள சுற்றுப்புறம் (Surrounding or environment). முதலாவது மனிதனுக்கு உரித்தானது, இரண்டாவது பூகோள சம்பந்தமானது; ஒன்றுக்கொன்று தாழ்வல்ல. ஆதலால், எல்லாச் சரித்திர சம்பவங்களுக்கும் பூகோளத்தில் காரணம் கண்டுபிடிப்பதென்பது தவறு. ஆயினும் சில சம்பவங்கள் பூகோள காரணத்தை யொட்டியவை. உதாரணமாக, சிந்து கங்கைச் சமவெளி மிகவும் வளம் பொருந்தியதாக இருப்பதனல்தான் அதைவிடக் குறைந்த வளமுள்ள இடங்களிலிருந்து பல சாதியார்கள் பண்டைக் காலம் முதல் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார்கள். வடமேற்கிலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகள் எல்லாம் அநேகமாக இக்காரணத்தை யொட்டியவையே யென்று சொல்லலாம். ஒவ்வொரு சரித்திர பாடத்தின்போதும் வேண்டிய தேசப் படங்களையோ, ரேகைப் படங்களையோ தயாரித்து வைத்துக் கொள்ளவேண்டும். சரித்திரத்திற்கு உபயோகமாயுள்ள பூகோள விஷயங்களைச் சொல்லவேண்டும். அப்பொழுதுதான் சரித்திரம் நன்கு விளங்கும்.

(b) **இலக்கியம்:** பாட புத்தகங்களைப்பற்றிச் சொல்லி வரும்போது மூன்றும் வகுப்புக்குச் சரித்திரக் கதைகளடங்கிய வாசக புத்தகங்களை வகுப்புக்குத் திட்டம் செய்தால் நலமா யிருக்குமென்று சொன்னேம். அதிலிருந்து சரித்திரத்திற்கும் இலக்கியத்திற்குமுள்ள நெருக்கமான சம்பந்தம்

வெளிப்படுகின்றது. தவிரவும் சரித்திர சம்பந்தமான பாட்டுகள் வாசக புத்தகங்களில் சேர்ந்திருந்தால் பிள்ளைகள் சுலபமாக அவற்றைப் பாடக் கற்றுக்கொண்டு அவற்றின் பொருள்களையும் தெரிந்து கொள்வார்கள்.

(c) **கை வேலை :** எல்லாப் பாடங்களையும் கைவேலையுடன் சம்பந்தப் படுத்த வேண்டும். ஏனெனில், பிள்ளைகளுக்கு ஏதாவது செய்து கொண்டிருப்பதில் பிரியம் அதிகம். சும்மாவிருக்கச் செய்தல்தான் அவர்களுக்குத் தண்டனை. ஆதலால் பலவிதக் கைவேலைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம். சரித்திர சம்பந்தமாகக் களிமண்ணில் மாதிரி செய்தல், படம் வரைதல், சித்திரங்களின் வெளி உருவங்களுக்கு வர்ணம் கொடுத்தல் முதலிய கைவேலைகளைக் கொடுக்கலாம்.

(d) **ஆட்சி நூல் (Civics) :** பொதுவாகச் சொல்லுமிடத்து, ஆட்சி நூல், சரித்திரத்தின் ஒரு பாகமென்று சொல்லலாம். அதனால் பண்டைக் காலத்தில் அடிக்கடித் துரைத்தன சம்பந்தமாக ஏற்பட்ட திட்டங்களைப்பற்றிப் பேசும்போது, தற்கால நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்துதான் சொல்லவேண்டும். தற்காலத்துப் பஞ்சாயத்துக்கள், சோழர் காலத்திலிருந்த கிராமப் பஞ்சாயத்துக்களின் நகல்கள் என்று சொல்ல வேண்டும். இம்மாதிரி அனேக சந்தர்ப்பங்களில் சம்பந்தப்படுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்.

10. சுய உணர்ச்சியை வெளிப்படுத்தும் வேலை

(Expression Work)

25. சுய உணர்ச்சி வேலை: பிள்ளைகளுக்கு ஏதாவது செய்து கொண்டிருப்பதில் விருப்பம் அதிகம் என்று முன்னமேயே சொன்னோம். அப்படிப்பட்ட உணர்ச்சியைச் சரித்திர சம்பந்தமாய் பலவிதமாக உபயோகப்படுத்தலாம். அவற்றில் சிலவற்றை இவ்விடத்தில் கூறுவோம்.

(a) நடித்தல்: இது பிள்ளைகளுக்கு இயற்கையான உணர்ச்சி. இவ்வுணர்ச்சியை அபிவிருத்தி செய்ய வேண்டும். நடிக்கக் கூடிய விஷயங்கள் சரித்திரத்தில் எத்தனையோ இருக்கின்றன. சரித்திர சம்பந்தமான நாடகங்களை இயற்றுவதில் உண்மையை முக்கியமாகக் கையாள வேண்டுவது அவசியம். சரித்திர சம்பந்தமான நாடகங்களில் உண்மைதான் அடிப்படையானது. சம்பாஷணைகளை மாத்திரம் சமயத்திற்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளலாம். நாடக பாத்திரங்களுக்கு அவை பொருத்தமாக இருக்க வேண்டும்.

ஆரம்பப் பள்ளிக்கூட பாடத் திட்டத்திலிருந்து கீழ்க் குறித்துள்ள விஷயங்களை நடிக்கத் தகுதியானவையாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

1. இராமாயண மகா பாரதக் கதைகள்
2. அரிச்சந்திரன் கதை
3. சிபிச் சக்கரவர்த்தியின் கதை

4. அலெக்ஸாந்தரும், போரஸும்
5. சாணக்கியரின் தந்திரம்
6. பாபரும் ஹுமாயூனும்
7. சிவாஜியும், ஔரங்கசீபும்

திறமையுள்ள ஆசிரியர் இன்னும் பல விஷயங்களை எடுத்துக்கொள்ளலாம். நடித்தல் சம்பந்தமாக ஒருவர் பேசும்படியாகவும், இருவர் பேசும்படியாகவும், மூவர் பேசும்படியாகவும் சம்பாஷணைகளை அமைக்கலாம். ஆனால் சம்பாஷணையின் பொருள் பேசுகிறவர்களுக்கும், கேட்கிறவர்களுக்கும் விளங்க வேண்டும். அப்பொழுதுதான் நன்ருக நடிக்க முடியும்.

நடித்தல், பல புலன்களுக்குப் பயிற்சியைக் கொடுப்பதால் நடித்தலைக் கையாளுவது மிகவும் நலம். விஷயத்தைச் சொல்லிவிட்டுச் சம்பாஷணைகளைப் பிள்ளைகளே அமைக்கும்படியாகச் செய்யலாம். முக்கியமான சந்தர்ப்பங்களில், அதாவது, பள்ளிக்கூட ஆண்டு விழா முதலிய காலங்களில் உடையுடன் நடிக்க ஏற்பாடுகள் செய்யலாம். ஆனல், உடைகள் நாடக சம்பவம் நிகழ்ந்த காலத்திற்குத் தகுதியாக இருக்கவேண்டும். இம்மாதிரித் திட்டம் செய்வதற்கு உபாத்தியாயர் பண்டைக் காலப் பழக்க வழக்கங்களை நன்ருக அறிந்திருக்கவேண்டும்.

மாதிரி சம்பாஷணைகள் சில அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(b) **கை வேலை:** இதைப்பற்றிப் பல விடங்களில் சொல்லியிருக்கிறோம். பண்டைக் காலத்து மனிதர் உபயோகப்படுத்திய ஆயுதங்களைப்போலச் சித்திரம் வரைதல், காகிதம்

கத்தரித்தல் முதலியவை செய்யலாம். குகை வீடுகள் போல மாதிரிகள் செய்யலாம். இதைப்பற்றி அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை.

(c) பிராஜெக்டுகள் (Project) : பிராஜெக்டு முறை தற்காலத்தில் இந்தியாவில் பல கல்விச் சாலைகளில் பரவி வருகின்றது. இம்முறையின் முக்கியமான நோக்கம், பிள்ளைகள் ஏதாவதொன்று செய்துகொண்டிருக்க வேண்டுமென்று விரும்பும் உணர்ச்சிக்கும், விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சிக்கும் வசதிகள் அளிப்பதுதான் தவிரவும், பிராஜெக்டு முறையில் பிள்ளைகளுடைய வேலை அதிகம். ஆனால் உபாத்தியாயர், கவனத்துடன் பிள்ளைகளுடைய வேலைகளை மேல் பார்க்கவேண்டும். கூடியவரையில் ஒவ்வொரு பிராஜெக்டுக்கும் வேண்டிய வேலையைப் பிள்ளைகளே செய்யவேண்டும். பிராஜெக்டு அவசிய மென்பதையும் பிள்ளைகள் உணரவேண்டும். அவசியமானல் உபாத்தியாயர் உதவியைப் பிள்ளைகள் கோரலாம். ஆனல் பிராஜெக்டு செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியைப் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் முதலில் எழுப்பவேண்டும். சில பிராஜெக்டுகளில் உபாத்தியாயர் உதவி அதிகமாகவும் வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு பிராஜெக்டிலும் பல பாகங்கள் உண்டு. முதலில், பிராஜெக்டைத் தீர்மானிக்க வேண்டும். பிறகு, அதற்கு வேண்டிய உபகரணங்களைச் சேகரித்துக் கொள்ளவேண்டும். அடுத்தபடி பிராஜெக்டைச் செய்ய வேண்டும். கடைசியாகப் பிராஜெட்டு சரியாகச் செய்யப்பட்டதா வென்று தர்க்கித்து நிதானிக்க வேண்டும்.

பிராஜெக்டுகளிற் பலவகையுண்டு. சில நமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு விடை கண்டுபிடிப்பவை (Problem Type). சில, மாதிரிகள் முதலியவை செய்தல் போன்றவை (Construction Type). மற்றும் சில, பிள்ளைகளின் மதிப்பை விளக்கக்கூடியவை (Appreciation Type); இன்னும் சில பழக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை (Drill Type).

ஐந்தாம் வகுப்பு வரையில், சரித்திர சம்பந்தமாகச் செய்யக்கூடிய பிராஜெக்டுகள் கீழே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எந்த வகுப்பில் எந்த பிராஜெக்டைச் செய்வதென்பதை உபாத்தியாயர் பிள்ளைகளின் திறமைக்குத் தக்கவாறு தீர்மானிக்க வேண்டும்.

A. The Problem Type

1. அசோகர் முதலில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்; பிறகு பௌத்த மதத்தைத் தழுவினர். ஏன்?

2. அக்பர் முகம்மதியராக இருந்த போதிலும், இந்துக்களை ஆதரித்ததற்குக் காரணமென்ன?

B. The Construction Type

1. குகை மனிதர்களின் வாழ்க்கையை விளக்கச் சித்திரங்கள் வரைதல், மாதிரிகள் செய்தல்.

2. சரித்திர சம்பந்தமான கட்டடங்களைப் போலக் களிமண்ணினால் மாதிரிகள் செய்தல்.

3. நடித்தல் (சம்பவங்களை உபாத்தியாயர் தேர்ந்தெடுக்கும்படி செய்யவேண்டும்)

C. Appreciation Type

பண்டைக் காலத்து அரசர்களின் சரித்திரத்தை இசை மூலமாகவும், வாசக மூலமாகவும் பயிலுதல்.

D. Drill Type

1. சில முக்கியமான வருஷங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கையாளும் சில தந்திரங்கள்.

(உ-ம்) வருஷங்களைப் பல பகுதிகளாகத் தொகுத்தல்—அரசர்கள் பட்டத்துக்கு வந்த வருஷங்கள். (ஒவ்வொரு அரச வமிசத்துக்கும் தனியாக இருக்க வேண்டும்) முக்கியமான சண்டைகள் நடந்த வருஷங்கள்; இதர சம்பவங்கள்.

2. ஆதார நூல்களை உபயோகித்தல்.

---

11. வெளியிடம் காணச் செல்லுதல்

26. கவனிக்க வேண்டிய விஷயங்கள் : சரித்திரத்திலும் பூகோளத்திலும் பாடங்கள் சம்பந்தமான இடங்களைக் காணச் செல்லுதல் மிக்க அவசியம். ஒவ்வொரு ஊருக்குச் சமீபத்திலும் சரித்திர சம்பந்தமாகப் பிரசித்திபெற்ற இடங்கள் இருக்கலாம். உபாத்தியாயர் தாமிருக்கும் இடத்தின் சரித்திரத்தை நன்றாகப் படித்திருந்தால் அம்மாதிரி இடங்களை எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். வெளியிடம் காணச் செல்லுதலில் உபாத்தியாயர் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு.

(a) புறப்படுவதற்கு முன்னதாகப் பார்க்கப் போகும் இடத்தைப் பற்றிப் பிள்ளைகளுக்கு ஓர் அபிப்பிராயம் ஏற்படும்படி செய்ய வேண்டும். என்ன விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பிள்ளைகளுக்கு முன்னதாகவே சொல்ல வேண்டும். இம்மாதிரி வெளியிடம் காணச் செல்வது அவசியமென்று பெற்றோர்களுக்கு

உபாத்தியாயர் வற்புறுத்தவேண்டும். சிறு பிள்ளைகளாக இருப்பதால் அவர்களை அதிகமாக நடத்தி அழைத்துக் கொண்டு போகக் கூடாது.

(b) பார்க்க வேண்டிய இடத்தை அடைந்ததும், பார்க்கவேண்டிய விஷயங்களைப் பிள்ளைகள் பார்க்கும்படி செய்ய வேண்டும்.

(c) பார்க்க வேண்டிய இடத்தைப் பார்த்துத் திரும்பியதும், பல கேள்விகள் மூலம் பார்த்த விஷயங்களைப்பற்றிக் கேட்டறியவேண்டும். வகுப்புக் கூட்டமொன்று கூட்டிச் சிறுவர் பார்த்ததைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

வெளியிடங் காணச் செல்வதனுல் ஏற்படும் பலன்கள்

(1) நாம் சொல்லிக் கொடுக்கும் விஷயங்கள் பிள்ளைகள் மனத்தில் நன்கு பதிவதற்கு உதவியாயிருக்கின்றது.

(2) பள்ளிங்கூடங்களில் கிடைக்காத பலவித உதாரணங்கள் கிடைக்கும்.

(3) உற்றுப் பார்க்கும் சக்தியும், வர்ணிக்கும் சக்தியும் அதிகரிப்பதற்கு வசதி ஏற்படுகின்றது.

(4) பள்ளிக்கூட வேலைகளில் பிள்ளைகளுக்குப் பிரியம் அதிகப்படுகின்றது.

(5) தாங்களே விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் வழக்கம் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்றது.

(6) பிள்ளைகளுக்கும் உபாத்தியாயருக்கும் நேசம் அதிகப்படுகிறது.

12. பாடங்களைத் தயாரித்தல்

27. பாடக் குறிப்புகளும் போதனைச் சாதனங்களும் : உபாத்தியாயர் பாடங்களைத் தயாரிப்பது, (a) பாடக் குறிப்புகள் எழுதுவது, (b) போதனைச் சாதனங்கள் தயாரிப்பது என இருவகைப்படும் :

(A) பாடக் குறிப்புகள் : எந்தப் பாடத்தைப் போதித்த போதிலும், பாடக் குறிப்புகள் அவசியம் வேண்டும். சரித்திர பாடத்திற்கு அவை மிகவும் அவசியம். ஒவ்வொரு விஷயத்திற்கும் பல விவரங்களிருந்த போதிலும், அவற்றில் எது முக்கியம் என்று உபாத்தியாயர் பொறுக்கிக் குறிப்புகள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். பாடக் குறிப்புகள் உபாத்தியாயர் தொழில் ஆரம்பிக்கும்போது விவரமாகவும் விஷயம், முறை என்று பிரித்தும் எழுதவேண்டும். அனுபவம் அதிக்கப்பட்ட பிறகு சுருக்கமாகவு மிருக்கலாம். "நான் அநேக வருஷங்களாக உபாத்தியாயரா யிருக்கிறேன்; எனக்குப் பாடக் குறிப்புகள் தேவையில்லை", என்று சொல்லும் உபாத்தியாயர் போதிப்பதற்கே தகுதியற்றவர் என்று சொல்லவேண்டும். போதிக்கும் முறையில் உபாத்தியாயர் ஒரே தடத்தில் விழுந்துவிடக் கூடாது. அப்பொழுது உபாத்தியாயருக்கு அபிவிருத்தியே இல்லாமற் போய்விடும். தொழிலில் அனுபவம் அதிகப்படுவதின் பயனாகப் புதிய முறைகளைக் கையாளுவதில் ஒருவித ஊக்கம் உபாத்தியாயருக்கு ஏற்பட வேண்டும்.

பாடக் குறிப்புகளில் அனுசரிக்கும் முறை, விஷயத்திற்குத் தக்கவாறு இருக்கவேண்டும். **போர்ட்மன்** என்னும் போதனமுறை நூலாசிரியர் விஷயத்திற்குத் தக்கவாறு முறைகளைப் பின்வருமாறு வகுத்துள்ளார் :

1. காலத்தைப்பற்றிப் போதித்தல் : உ-ம்—(வேத காலம்)

(a) தேசத்தின் தோற்றம்
(b) ஜனங்களின் வீடுகள், கட்டடங்கள் முதலியன
(c) பழக்க வழக்கங்கள், நாகரிகம் முதலியன
(d) அரசியல், மதம்

2. ஒருவரைப் பற்றிய சரித்திரம் : உ-ம்—(அக்பர்)

(a) பிறப்பு, குழந்தைப் பருவம்
(b) சுற்றிலுமுள்ள மனிதர்களின் சம்பந்தங்கள்
(c) தன்மை, அரசியல் திட்டம் ; செய்த வேலை
(d) அவரால் சரித்திரம் எப்படி மாறுபாடடைந்தது.
(e) முக்கியமான சம்பவங்கள்
(f) அவர் அரசாட்சி செய்தபோது ஜனங்களின் நிலைமை.

3. முக்கியமான சம்பவங்கள்

(a) காரணங்கள்
(b) சம்பவங்களும் அவற்றில் சம்பந்தப்பட்ட மனிதர்களும்
(c) முடிவு—பலன்கள்

(B) பாடம் போதிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் : உபாத்தியாயர் தாம் போதிக்கும் வகுப்புகளுக்கு அவசியமான விஷயங்களைத் திட்டம் செய்துகொண்டு அதற்கு வேண்டிய உபகரணங்களை முன்னதாகவே தயாரித்துக் கொள்ளலாம்.

சில உபகரணங்களைப் பாடம் நடக்கும்போதே தயாரித்துக்கொள்ள வேண்டும் ; ஸ்கெட்சுப் படங்கள், காலக்கோடு

கள் முதலியவைகளைப் பாடம் நடக்கும்போதே கரும்பலகையில் வரையவேண்டும். முன்னதாகவே தயாரித்துக்கொள்ளக் கூடிய உபகரணங்களைத் தாமே செய்ய முடியாவிட்டால், தெரிந்தவர்களைக் கொண்டு செய்து வைத்துக் கொள்ளலாம்.

எந்தப் பாடமாயிருந்த போதிலும் தகுந்த உபகரணங்களுடன் போதித்தால்தான், பாடம் பயனுள்ளதாகும். வேண்டிய உபகரணங்களைப்பற்றி முன்னமேயே விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டாம் பாகம்

ஆட்சி நூல்

1. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆட்சி நூல் போதிப்பதன் நோக்கமும், எவ்வளவு போதிப்ப தென்பதும்

1. நோக்கம்: அனேகமாக மனிதன் தனிமையாக வசிப்பது என்பது முடியாத காரியம். பிறருடன் சேர்ந்து வசிப்பதுதான் மனிதனுடைய இயல்பு. சமூக வாழ்க்கை யென்பது மனிதனுக்கு உடன் பிறந்த தன்மை. அப்படி வசிக்க வேண்டுமானால் தன்னுடைய இச்சைப்படி நடப்பது முடியாது. (தன்னிஷ்டப்படி நடந்து கொண்டால் பல சமயங்களில் மற்றையோருக்குத் தொந்தரவு ஏற்படும்) ஆதலால், நாளடைவில் சமூக வாழ்க்கையின் நலத்திற்காக மனிதனுடைய சுயேச்சைக்குச் சில கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. இக்கட்டுப்பாடுகளைச் சமூக வாழ்க்கையின் நலத்திற்கு உபயோகிக்கச் சிலர் ஏற்பட்டனர். இவர்கள் செய்யும் வேலைக்குத்தான் ஆட்சி என்று பெயர்.

தவிரவும், மனிதன் தானாகவே பிறரின் நலத்தைக் கருதி நடந்து கொள்வது அரிது. ஆகையால், அவன் சரிவர நடக்கும்படி கட்டுப்படுத்த நீதி மன்றங்கள் முதலியவை ஏற்பட்டிருக்கின்றன.

நாம் எப்படி ஆளப்படுகிறோம் என்று தெரிந்துகொண்டாலன்றி, அதற்கு ஏற்க நாம் நடந்து கொள்ள முடியாது. ஆட்சி நூலை ஆங்கிலத்தில் '**சிவிக்ஸ்**' என்று சொல்லுகிறோம். அப்பதம், '**லத்தீன்**' பாஷையில் '**நகரவாசி**' என்னும் பொருள் தரும்படியான ஒரு பதத்திலிருந்து வந்தது. ஏனெனில், பண்டைக் காலத்தில் இத்தாலியிலும், கிரீஸ் தேசத்திலும் ஜனங்கள் நகரங்களிலேயே வசித்து வந்தார்கள். ஆதலால், அக்காலத்தவர் தங்கள் நகரபரிபாலனத்தை நன்கு தெரிந்து கொண்டார்கள். இப்பொழுது நாம் தேசவாசிகளா யிருக்கிறோம். ஆதலால், தேச ஆட்சி நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். அது மாத்திரம் போதாது. பொருளாதார சம்பந்தமாகவும், துரைத்தன சம்பந்தமாகவும் உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களும் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. அப்படி யிருந்தும், தேசவாசி என்னும் உணர்ச்சி நம்மிடத்தில் அதிகப்பட அதிகப்பட, தேசங்களுக்காக அடிக்கடிச் சண்டைகள் ஏற்பட்டுவிடுகின்றன. சண்டைகள் ஒழிந்து அமைதி ஏற்பட வேண்டுமானால், தேசவாசி என்னும் உணர்ச்சி போய், உலகவாசி என்னும் உணர்ச்சி ஏற்படவேண்டும். நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் உலகவாசி என்னும் உணர்ச்சி நம்முடைய பிள்ளைகளுக்கு ஏற்படும்படி செய்வதுதான் ஆட்சி நூல் போதிப்பதன் நோக்கமென்று சொல்லலாம்.

2. எவ்வளவு போதிப்பது? ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப் பிள்ளைகள் விடும்போது தாங்கள் வசிக்கும் கிராமத்தில் மனித வாழ்க்கை எப்படி யிருக்கின்றது; தேசம் எப்படி ஆளப்படுகின்றது; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்

நம்முடைய தேசம் எப்படி ஒரு பாகமா யிருக்கின்றது; பிரிட்டிஷ் துரைத்தனத்திற்கும் நம்முடைய தேசத் துரைத்தனத்திற்கும் எவ்வித சம்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது என்னும் விஷயங்களைப் பிள்ளைகள் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் தேசத்திற்கும், உலகத்திற்கும் நம்முடைய கடமை யென்ன வென்பது வெளிப்படும்.

---

2. கல்வி இலாக்காப் பாடத் திட்டம்

3. பாடத் திட்டம்: ஆட்சி நூல் பாடம் ஆரம்பிக்க வேண்டியது நான்காவது வகுப்பில்தான். ஆயினும் I, II, III வகுப்புகளில், கதைகள் மூலமாகவும், தக்க உதாரணங்களோடும் பின் வருபவைகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும்.

(1) ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அக்குடும்பத்தின் சார்பாக, அவர்கள் செலுத்த வேண்டிய கடமைகள், ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய விதம், பெரியோர்களிடத்தில் மரியாதை.

(2) ஒரு கிராமம் பல குடும்பங்கள் சேர்ந்தது; அங்குப் பல தொழில்கள் உண்டு; நமக்கு உணவு, உடை முதலியன எப்படிக் கிடைக்கின்றன? இவை நமக்குக் கிடைப்பதற்குப் பிறர் நமக்கு எப்படி உதவுகிறார்கள்? ஒருவருக்கொருவர் உதவி என்னும் உணர்ச்சி.

(3) நல்ல பழக்கங்கள்; பிராணிகளிடத்திலும் தாவரங்களிடத்திலும் அன்பு; தன்னைவிடத் தாழ்ந்தவர்களிடத்தில்

அன்பு ; பிறருடைய உணர்ச்சிகளையும், சொத்துக்களையும் பாராட்டுதல்.

(3) சுத்தமான பழக்கங்களை அனுசரித்தல் ; நம்மைச் சுத்தமாக வைத்துக் கொள்ளல் ; நம்மைச் சுற்றிலுமுள்ள இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளல் ; எல்லாவற்றையும் ஒழுங்காகவும், பார்ப்பதற்கு அழகாகவும் வரிசைப் படுத்தி வைக்கவேண்டும்.

(5) சுகாதார விளையாட்டின் விதிகள். இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தாரின் பிரசுரங்களைப் படித்துப் பிள்ளைகளுக்கு அவற்றிலுள்ள விஷயங்களைப் போதிக்கலாம். சுகாதார விதிகள் எப்படி முக்கியமானவை என்று பிள்ளைகள் அறிய வேண்டும்.

ஏதாவதொரு பிள்ளை பற்களைச் சுத்தஞ் செய்யாமலும், அழுக்கு நிறைந்த கைகளோடும், அல்லது சுகாதார விளையாட்டு விதிகளுக்கு மாறாகவும் பள்ளிக்கூடத்திற்கு வந்தால், உபாத்தியாயர் கவனித்து, அப்பிள்ளையைப் பள்ளிக்கூடத்திலாவது வீட்டிலாவது தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்ளும்படி செய்யவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்தைச் சுத்தஞ் செய்யச் சிறிது நேரம் செலவழிக்கும்படி செய்யவேண்டும். இவ்வயதில் பின்பற்றுந்தன்மை பிள்ளைகளுக்கு அதிகமா யிருக்குமாதலால், உபாத்தியாயர் சுத்தமாயிருத்தல் முதலிய விஷயங்களில் தாமே ஒரு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும்.

IV, V-ம் வகுப்புகளில் சிவிக்ஸ் சம்பந்தமாகப் பிராஜெக்ட் முறையை அனுசரிக்கலாம்.

வகுப்பு—IV

நாமிருக்கு மிடத்திற்குப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு நமது கடமைகள்; வகுப்பில் நம்முடன் படிப்பவர்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்களிடத்தில் செலுத்தும் கடமைகளிலிருந்து இவை ஆரம்பிக்கவேண்டும்; வீடு, பள்ளிக்கூடம், விளையாடுமிடம் முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல்; சுத்தமான ஆகாரம், சுத்தமான வாயு, தேகப்பயிற்சி, இளைப்பாறுதல், முதலியவற்றை வற்புறுத்தல்; தொத்து வியாதிகள்; அவை சம்பந்தமாக நாம் முன் ஜாக்கிரதையாக அனுசரிக்க வேண்டிய முறைகள்; ஒவ்வொரு நாளும் சுகாதார முறைப்படி வாழ்க்கையை நடத்தல்.

கிராமம்: எப்படி ஆளப்படுகின்றது; கிராம அதிகாரிகள்; கிராம துரைத்தன சம்பந்தமாகவும் இதர விஷயங்களுக்காகவும் ஏற்பட்டிருக்கும் திட்டங்கள்; பஞ்சாயத்து, கூட்டுறவுச் சங்கம்—அவை ஏன் அவசியம்?

கிராமத்திற்கும் பட்டணத்திற்கு முள்ள வித்தியாசம்—உதாரணங்கள் மூலம் விளக்கவும்—கிராமத்திலும் பட்டணத்திலும் பொது விஷயங்களை எப்படி நிர்வாகம் செய்கிறார்கள்?

சென்னை ராஜதானி—ஜில்லா அதிகாரிகள்; பட்டணங்களில் நகர நிர்வாக சபைகள்; அவற்றின் கடமைகள்; ஸ்தல சுய ஆட்சி சம்பந்தமான வரிகள்; ஒரு தபால் கார்டின் சுற்றுப் பிரயாணம்; ரயில் பிரயாணம். கடைசியில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டு விஷயங்களும் பிராஜெக்ட் முறையை அனுசரிக்கத் தகுதியாயுள்ளவை. பிள்ளைகளைத்

தபாலாபீசுக்கும், ரயில் ஸ்டேஷனுக்கும் அழைத்துச் செல்வதோடு இந்தப் பிராஜெக்டுகளைச் செய்யும்படி செய்ய வேண்டும்.

சாலைகளில் செல்லும்போது சாதாரணமாக அனுசரிக்க வேண்டிய விதிகள்; (Safety First) விளையாட்டுகள்.

(1) பாதசாரிகளுக் கென்று ஏற்பட்டிருக்கும் இடது பக்கமாக உள்ள வழியில் செல்லுதல்.

(2) அப்படித் தனியாக வழி போட்டிரா விட்டால் சாலைகளில் இடது பக்கத்தின் ஓரத்தில் செல்லல்.

(3) சாலைகளில் நிற்பதாவது, வம்பு பேசுவதாவது கூடாது.

(4) சாலைகள், வழிகள் முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பழத்தோல்கள், உடைந்த கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் முதலியவற்றை வழிகளில் இல்லாதபடி எடுத்தெறிதல்.

(5) தெருக்களிலும் நடை வழிகளிலும் விளையாடாமல் இருத்தல்.

(6) சாலைகளைக் கடக்கும்போது, ஜாக்கிரதையாகச் செல்லவேண்டும்.

(7) பஸ், டிராம், ரயில் வண்டி முதலியவைகளில் ஏறுவதும் இறங்குவதும்.

வகுப்பு—V

உடலின் பல பாகங்கள்—அவைகளின் முக்கியமான அலுவல்கள் ; தசைகளும் அவற்றின் அசைவும் ; ஆகாரத்தை ஜீரணம் செய்தல் ; உடலைப் பாதுகாத்தல்.

விவரமான அறிவு அவசியமில்லை. படங்களை (Charts) அதிகமாக உபயோகிக்கவேண்டும். (பிள்ளைகளை எலும்புக் கூடு முதலியவைகளின் படங்களை வரையும்படி செய்ய வேண்டும்.)

நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளல்; சுகாதாரத்தையும் நன்னடக்கையையும் அபிவிருத்தி செய்தல்; தன்னுடைய சுகாதாரமும், சமூக சுகாதாரமும் எப்படி முக்கியம்; உணவு, சுத்தமான வாயு, தேகப்பயிற்சி, களைப்பாறுதல் முதலியவை தேகத்திற்கு அவசியம்; பலவித உணவுப் பொருள்களும் அவற்றின் பிரயோஜனமும்; வியாதிகளுக்குக் காரணங்களும் அவற்றை விலக்குதலும். புகையிலை, அபின், கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தல்; மயக்கத்தைக் கொடுக்கும் பானங்கள்; அவற்றின் உபயோகத்தினால் தேக சௌக்கியம் கெடுவது.

துரைத்தனம் எதற்கு? அது நமக்கென்ன செய்கிறது? துரைத்தன இலாக்காக்கள்; துரைத்தனத்தின் அமைப்பு--சக்கரவர்த்தி; பார்லிமெண்டு சபைகள்; இந்தியா மந்திரி; வைஸிராய்—கவர்னர் ஜனரல்; மாகாண கவர்னர்கள்; மந்திரிகள்; துரைத்தன இலாக்காக்கள்; ஜில்லா, கிராம அதிகாரிகள்; அவர்களின் முக்கியமான அலுவல்கள்; அகில இந்திய சட்டசபைகளும், மாகாண சட்டசபைகளும்; அவற்றின் அமைப்பும் அலுவல்களும்; மாகாண சட்டசபைகளும் கிராம சமூக வாழ்க்கையின் திட்டமும்; மத்திரி சங்கத்தை ஏற்படுத்தல்; வாக்குரிமைச் சீட்டின் உபயோகம்; தேர்ந்தெடுத்தல்; பஞ்சாயத்துகள் வேலை செய்யும் விதம்; ஜில்லா போர்டுகள்; நகர சபைகள்; கூட்டுறவுச் சங்கங்கள்.

கடவுள், அரசன், தேசம் முதலியவற்றில் அன்பு—நமக்கும், நம்முடைய தேசத்திற்கும் நாம் செலுத்தவேண்டிய கடமைகள். ஜனங்களுக்குள் ஒற்றுமை; வகுப்புக்களில் சமத்துவம்; பின்னடைந்துள்ள வகுப்பினர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள்; ஹரிஜனங்கள், ஷரத்தில் கண்ட வகுப்பினர் முதலியவர் (Scheduled Classes); சாலை விதிகளைப்பற்றி அதிகமான விவரங்கள்; இவை சம்பந்தமாக நான்காம் வகுப்பில் நடந்த பாடங்களைத் திருப்புதல்.

(1) வழிநடைச் (Traffic) சின்னங்கள்.

(2) சைகில்கள், மோட்டார் சைகில்கள், மோட்டார் வண்டிகள்.

(3) ஆபத்தான சம்பவங்களைத் தடுத்தல்.

இப்பாடத் திட்டம் திருகல் முறையை அனுசரித்திருக்கிறது. இப்பாடத் திட்டத்தின்படி ஆட்சி நூலைப் போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்களைப் பின்வரும் அத்தியாயங்களிற் கூறுவோம்.

---

3. ஆட்சி நூலைப் போதிப்பதற்கு வேண்டிய உபகரணங்கள்

(a) **திருஷ்டாந்தங்களின் மூலம் விளக்குதல்:** திருஷ்டாந்தங்கள் இருவகைப்படும்.

(i) **திருஷ்டாந்தங்களை நாம் கூறி விஷயத்தை விளக்குதல்:** உதாரணமாக ஒரு கிராமத்தில் பலர் பல தொழில்களில்

அமர்ந்திருக்கின்றனர். ஒவ்வொரு தொழிலும் கிராம வாழ்க்கைக்கு இன்றியமையாதது. கிராமத்தில் இருப்பவர் ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, வீடு அவசியம். இம் மூன்றும் அவருக்குக் கிட்டும்படி பல தொழிலாளிகள் உதவுகின்றனர். அத்தொழிலாளிகள் சிலர் இல்லாமல் போனால், கிராமத்தவருக்கு எவ்வளவு அசௌகரியமாக இருக்கும்? என்று இம்மாதிரி திருஷ்டாந்தங்களுடன் விளக்கினால், பிள்ளைகள் ஆட்சிநூல் சம்பந்தமான விஷயங்களைத் தெளிவாக அறிவார்கள்.

(ii) **சித்திரங்கள் மூலமாக விளக்குதல்:** சாலைகளில் செல்லுவதின் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் விதிகளைச் சித்திரங்களின் மூலமாக விளக்கலாம். ஒரு சாலை போலச் சித்திரம் வரைந்து, வண்டிகள் செல்வதற்கும், பாதசாரிகள் செல்வதற்கும் தனிவழிகள் காட்டி இடது பக்கம் செல்வதுபோலக் காண்பித்து விளக்கலாம்.

(b) **படங்கள், விவரப் படங்கள், மாதிரிகள் முதலியன:** சித்திரப் படங்கள் உபயோகிப்பதைப்பற்றி மேலே கூறியிருக்கிறோம். மாதிரி கிராமம், மாதிரி வீடுகள் முதலியவற்றின் படங்களையும், மாதிரிகளையும் பிள்ளைகளுக்குக் காண்பிக்கலாம். ஐந்தாம் வகுப்புக்கு உடலின் பல பாகங்களின் வேலைகளைப்பற்றிப் போதிக்கும்போது, உடல் ஒரு பெரிய இயந்திரசாலை யென்பதைப் படத்தின் மூலம் விளக்கலாம்.

(c) **வெளிச்சென்று பார்த்தல்:** மேற்கூறிய உதவிகள் மாத்திரம் போதாது. பல இடங்களுக்குப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போகவேண்டும். தபாலாபீஸ் கிரா

மத்திலிருந்தால் பிள்ளைகளை அங்கே அழைத்துச் சென்று, கடிதங்கள் எப்படி அனுப்பப்படுகின்றன என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்கவேண்டும். அம்மாதிரியே ரயில்வே ஸ்டேஷனுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்ல வேண்டும். ரயில் வண்டியில் ஏறும்போதும், இறங்கும் போதும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று போதிக்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்தின் அலுவல்கள் என்னவென்பதைப் பஞ்சாயத்து வேலை செய்வதைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இம்மாதிரி நேரில் பார்த்தால், பிள்ளைகள் சுலபமாக அறிந்து கொள்வார்கள்.

(d) **பிள்ளைகள் செய்யும் வேலை :** (i) **நடித்தல் :** சரித்திரம் போதிக்கும் முறையைப்பற்றிச் சொல்லும் போதே **நடித்தல்** பிள்ளைகளுக்கு மிகவும் களிப்பைக் கொடுக்குமென்று சொன்னோம். ஆட்சிநூல் சம்பந்தமாக நடிக்கக் கூடிய விஷயங்கள் பல இருக்கின்றன. பஞ்சாயத்துக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுத்தல், கிராமப் பஞ்சாயத்து நியாய சபைகளில் நடவடிக்கை முதலியவற்றை நடிக்கும்படி செய்யலாம்.

(ii) **பிராஜெக்டுகள் :** பல பிராஜெக்டுகள் செய்யலாம். தபாலாபீஸ் பிராஜெக்டுகள் பல பள்ளிக்கூடங்களில் நடைபெறுகின்றன. அது மிகவும் சுலபமானது. அதைத் தவிர, பள்ளிக்கூடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளல், கிராமத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல் (Village cleaning project), ஆரோக்கியத்தைக் கொடுக்கும் உணவுகளைக் கிராமத்தார் புசிக்கும்படி செய்தல் முதலிய பிராஜெக்டுகள் நடத்தலாம்.

(iii) **பிள்ளைகள் துரைத்தனம்** : பாடங்களைத் தவிர, இதர விஷயங்களைச் சரிவர நடத்துவதற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வது நலமானதே. அமெரிக்காவில் இம்முறை பல விடங்களில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் பிள்ளைகளுக்குத் தங்கள் பள்ளிக்கூட சம்பந்தமான காரியங்களைத் தாங்களே நடத்திக்கொள்ளத் தக்க பயிற்சி கொடுக்க வேண்டும். பொதுவாகக் காரியங்களைக் கவனிக்க ஒரு மாணவர் சபை ஏற்படுத்தலாம். மாணவர் சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சபையைப் பல கமிட்டிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு கமிட்டியும் ஒரு அலுவலைக் கவனிக்கும்படி செய்யலாம். உதாரணமாக, (1) கெட்டுப் போய் அகப்பட்ட சாமான்களைச் சொந்தக்காரர்களிடம் திரும்பக்கொடுக்க ஒரு கமிட்டி, (2) வகுப்பு அறைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு கமிட்டி, (3) விளம்பரக் கமிட்டி, (4) பள்ளிக்கூடத் தினக்கொண்டாட்டக் கமிட்டி, (5) இலக்கிய சங்கக் கமிட்டி என்று தேவைக்குத் தக்கபடி கமிட்டிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அக்கமிட்டிகளெல்லாம் அவைகளுக்கு ஏற்பட்ட அலுவல்களைச் சரிவர நடத்திவருகின்றனவா வென்பதை உபாத்தியாயர்கள் நன்கு கவனிக்க வேண்டும். அப்போதுதான் அவை பயனுள்ளவையாகும்.

(iv) **கை வேலை** : முன்னமேயே சொல்லியபடி கைவேலை பல வகைப்படும். உதாரணமாக, **ஸ்கெட்சுகள், வரைதலைக்** கூறலாம். தாங்களிருக்கும் கிராமத்தின் பிளான் வரைந்து பள்ளிக்கூடம் இருக்குமிடத்தைக் குறிக்கலாம். கிராமத்தில் குடிக்கும் தண்ணீர் எங்குக் கிடைக்கின்றது என்பதைக் கிராமப் படத்தில் குறிக்கலாம்.

(v) **சித்திரங்கள் :** பள்ளிக்கூடத்தின் சித்திரம், விளையாடும் இடம், சுத்தமான வீடு முதலியவற்றின் சித்திரங்கள் வரையலாம்.

(vi) **மாதிரிகள் :** சித்திரங்கள் வரையும் பொருள்களையே மாதிரிகளாகவும் செய்யலாம்.

---

4. உபாத்தியாயரின் ஆயத்தம்

(a) **ஆட்சிநூல் சம்பந்தமாக உபாத்தியாயரின் அறிவு :** பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் விஷயம் குறைவாயிருந்த போதிலும், பாடத்தைப்பற்றி உபாத்தியாயருக்கு அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் உபாத்தியாயருக்குப் போதிப்பதில் தைரியமேற்படும்.

மேற்கூறிய அறிவு இருவகைப்படும் : (i) பண்டைக் காலம் முதல் மக்கள் சமூக வாழ்க்கையின் வளர்ச்சியும், அதையொட்டி மக்கள் ஏற்படுத்திக்கொண்ட திட்டங்களும், (ii) பலவித துரைத்தனங்களும், அவற்றின் முக்கியமான அமிசங்களும்.

சமூக வாழ்க்கையின் வளர்ச்சியைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். பண்டைக் காலத்தில் பூமியில் மனித வாழ்க்கை ஏற்பட்டபோது மனிதன் கீழே விழுந்து கிடந்த காய் கனிகளை எடுத்துத்தின்று ஜீவித்து வந்தான். நாளடைவில், கற்களால் கரடு முரடான ஆயுதங்களைச் செய்து கொண்டு மிருகங்களை வேட்டையாடி, அவற்றின் மாமிசத்தைத் தின்று ஜீவித்துவந்தான். இப்பொழுதும் அவ

னவன் தன் உணவுப் பொருள்களைத் தேடி வந்ததால், சமூக வாழ்க்கை அதிகமாக வளர்ச்சி யடையவில்லை.

அநேக ஆயிர வருஷங்களுக்குப் பிறகு, மனிதன் சிறந்த கற்களாலாயே ஆயுதங்களை உபயோகப்படுத்தியது மல்லாமல், உலோகங்களையும் ஆயுதங்கள் செய்ய உபயோகப்படுத்திவந்தான்; பூமியை உழுது விவசாயம் செய்ய ஆரம்பித்தான். இதுதான் நாகரிக வளர்ச்சிக்கு ஆரம்பம். இதற்குமுன், மனிதன் வேட்டையாடிப் பிழைத்து வந்தபோது ஒரே இடத்தில் வசிக்க முடியாதிருந்தது; பல இடங்களில் திரிந்து செல்ல வேண்டியிருந்தது. விவசாயம் செய்ய ஆரம்பித்தவுடனே மனம் சென்றபடி பல இடங்களுக்குச் செல்ல முடியாமற் போயிற்று. இக்காலத்தில் மனிதன் வசிப்பதற்கு வசதியான வீடு அவசியமாயிற்று. குடும்பம் ஏற்பட்டது; குடும்ப சம்பந்தமான கட்டுப்பாடுகள் அதிகமாயின. இப்படிப்பட்ட சமூக வாழ்க்கை எகிப்து, சீனா, இந்தியா முதலிய இடங்களில் அபிவிருத்தி யடைந்து வந்தது.

விவசாயம் செய்பவர்கள் அமைதியுள்ளவர்கள்; அதிகமாக ஒருவரோடொருவர் சண்டை செய்யமாட்டார்கள். செழிப்பான நிலமுள்ள இடங்களில்தான் இவர்கள் குடியேறி யிருப்பார்களாதலால், தங்களுக்குப் போதுமானது போக மிகுதியான உணவுப் பொருள்களைப் பிறருக்குக் கொடுத்துத் தமக்கு வேண்டியவைகளை அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்வார்கள். இதற்கு வியாபாரம் என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு வருஷமும் தாங்கள் செய்து வந்த வேலையையே திரும்பத் திரும்பச் செய்து வந்ததால்

சமூக வாழ்க்கையிலும் அதிகமான மாறுபாடுகளைச் செய்ய விரும்புவதில்லை.

இவர்களிருந்த இடங்களுக்குச் சுற்றுப் பக்கங்களிலிருந்தவர்கள் இவர்களுடைய செல்வத்தைப் பார்த்துப் பொறுமை யடைந்து, தங்கள் கஷ்டமான நிலைமையை நிவர்த்தி செய்துகொள்ள எண்ணி, அடிக்கடி விவசாயிகள் வசித்து வந்த இடங்களுக்குச் சென்று, அவர்களை இம்சித்து, அவர்களது செல்வத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு தங்களுக்குச் சொந்தமான இடங்களுக்குச் சென்றார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு, திரும்பித் தங்கள் தேசத்திற்குச் சென்று திரும்பத் திரும்ப வருவதை விட, தாங்கள் விவசாயிகளிருந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள். அப்பொழுது விவசாயிகள் புதிதாக வந்தவர்களுக்கு அடிமைகளாகவோ வேலை செய்பவர்களாகவோ ஆனார்கள். இம்மாதிரியான சம்பவங்கள் மேற்கூறிய எல்லாத் தேசங்களிலும் ஏற்பட்டன.

இம்மாதிரி படையெடுத்து வந்தவர்களில் பலர் ஆடுகள், மாடுகள், குதிரைகள் முதலியவற்றை மந்தை மந்தையாக வளர்த்துக்கொண்டு பல இடங்களில் திரிந்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது மத்திய ஆசியாச் சம சீதோஷ்ணப் புல்வெளிகளில் வசித்து வருகிறார்கள். அவர்களில் ஒரு வகுப்பினர் கர்கிஸ் ஜாதியார். இவர்களது வாழ்க்கை அமைதியானதல்ல. இவர்கள் பல சமயங்களில் தங்களைப்போன்றவர்களோடு, மேய்ச்சல் நிலத்திற்காகச் சண்டைசெய்ய வேண்டியதாயிற்று. பல விடங்களுக்குச் செல்லவேண்டியிருந்ததால், வாழ்க்கைச் சம்பந்தமான விஷயங்களில் அடிக்கடி மாறுபாடுகள் இவர்களுக்கு ஏற்படலாம். சண்டை செய்வதிலும் திறமை அதிகரிக்கலாம்.

விவசாயிகளின் வாழ்க்கையைப்பற்றிச் சொல்லும் போது வியாபாரத்தைப் பற்றிக் கவனிப்போம். பொருள் களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் தாங்களே நேரில் எப் பொழுதும் வேண்டியவர்களுக்குத் தங்களிடத்திலுள்ள பொருள்களைக் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய பொருள் களை அவரிடமிருந்து வாங்கிக்கொள்ள முடியாதாகையால், பொருள்களைக் கொடுப்பவர்களுக்கும் வாங்குகிறவர்களுக் கும் இடையில் வியாபாரிகள் ஏற்பட்டார்கள். இவர்கள் பல விடங்களுக்குச் சென்று, ஆங்காங்கு அகப்படும்பொருள்களை வாங்கி, வேறு இடங்களில் விற்றுப் பணமாக்கிக்கொண்டு தங்கள் சொந்த இடத்திற்குத் திரும்பினார்கள். இவர்களுக் குச் செல்வம் அதிகரித்தது. இவர்களால் நாகரிகம் தேசத் தில் பரவிற்று; போக்கு வரவுச் சாதனங்கள் மிகவும் அபி விருத்தி யடைந்தன; பட்டணங்கள் ஏற்பட்டன; வியா பாரத்தில் சிறந்தவர்கள் இருந்த பண்டைக்காலத்துப் பட்ட ணங்களில் கிரீஸ் தேசத்திலுள்ள ஆதென்ஸ் ஒன்று. மத் திய காலத்தில் இத்தாலியில் வெனிஸ், ஜினோவா முதலிய நகரங்களும், வியாபாரிகள் நிறைந்த இடங்களாயின.

இப்பட்டணங்களில் கைத்தொழில் விருத்தியடைந்து வந்தன. கைத்தொழிலாளிகள் சங்கங்களும் அபிவிருத்தி யடைந்து வந்தன. சங்கத்தினர்கள், தொழில்களில் பயிற்சி கொடுப்பதற்காகவும், தங்களுக்குள் தொழிலில் உதவியா யிருப்பதற்காகவும் பல சிறுவர்களை தங்களிடம் சேர்த்துக் கொண்டார்கள். இவர்கள் தொழில்களில் நன்கு பயின்ற உடன் தாம் கற்றவரிடம் அனுமதிபெற்றுத் தனிமையாகத் தொழிலை நடத்த ஆரம்பித்தார்கள். இம்மாதிரியான தொழி லாளர் சங்கங்கள் நம்முடைய தேசத்தில் மதுரை முதலிய

பல விடங்களிலும், ஐரோப்பாவில் பல தேசங்களிலும் இருந்து வந்தன. ஒரு தொழிலில் ஒருவன் அதிகமாகப் பிர சித்தி பெற்றுவிட்டால் அவனிடம் பலபேர் வேலை செய்ய வந்தவுடன் அவன் ஓர் எஜமானனுக ஆய்விடுவான். இது தான் தற்கால ஆலைத்தொழில் சம்பந்தமான வாழ்க் கைக்கு ஆதாரமாயிற்று.

பதினெட்டாவது நூற்ருண்டின் இறுதியில் கைத்தொழில் சம்பந்தமாக, அதனிலும், நெசவுத் தொழில் சம்பந்தமாக, இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றின் மூலம் பொருள்கள் ஏராளமாயின; வியாபாரம் அபிவிருத்தி யடைந்தது; போக்குவரவு சாதனங்கள் அதிகரித்தன; ஆலைகளில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். பட்டணங்கள் வளர்ந்தன; ஏராளமான செல்வம் சிலர் கைகளில் சிக்கிக் கொண்டது. ஆலைத் தொழிலில் சேர்ந்த தேசங்களில், சமூகமானது இரண் டாகப் பிளவு பட்டது. தொழில்களை நடத்த அவசியமான ஏராளமான செல்வமுடைய முதலாளிகள் (Capitalists) ஒரு வகை; அவர்களுக்கு வேலை செய்யும் தொழிலாளிகள் (Working class) மற்ருெரு வகை. இதுதான் தற்காலத்தில் மேல் நாடுகளில் சமூக வாழ்க்கையின் நிலைமை.

நமது தேசத்தில் விவசாயமே முக்கியமான தொழிலா யினும், சமூக வாழ்க்கையில் பல காரணங்களால் ஏற்றத் தாழ்வுகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன.

இதுகாறும் பண்டைக் காலம் முதல், தற்காலம் வரை சமூக வாழ்க்கையில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பற்றிச் சொல்லி வந்தோம். இன்னும் அதிகமான விவரங்கள்

வேண்டுமானால் தகுந்த புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இனிமேல் தற்காலத்தில் உலகத்தில் நடந்துவரும் பலவிதத் துரைத்தனத் திட்டங்களைக் கவனிப் போம். முதலில் நமது தேச துரைத்தனத் திட்டத்தை எடுத் துக்கொள்வோம். ஜனங்களை ஆளும் அதிகாரம் எப்படிப் பரவியிருக்கிறதென்பதைப் பின்வரும் படம் சற்று விளக்கு கின்றது.



படத்தைக் கவனித்தால் பின்வரும் விஷயங்கள் தெளி வாகும். ஆங்கில சாம்ராஜ்யத்தைச் சக்கரவர்த்தி, பார்லி

மெண்டு சபைகளுடன் சேர்ந்து ஆளுகின்றார். உண்மை யாகச் சொல்லுமிடத்துப் பார்லிமெண்டு எப்பொழுதும் அரசருடைய தடையில்லாத அனுமதியுடன் ஆளுகின்றது. பார்லிமெண்டு சபைகளில் ஒன்றாகிய காமன்ஸ் சபை மெம் பர்கள் ஆங்கில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதிக வலிமையுள்ள கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கும் பார்லிமெண்டு மெம்பர்களில் முக்கியமானவர்கள் மந்திரிச் சபையின் அங்கத்தினராகின்றனர். அதற்குப் பிர தான மந்திரி தலைமை வகிக்கின்றார். அம்மந்திரிகளில் ஒருவர் இந்தியா மந்திரி. அவருக்கு ஒரு ஆலோசனைச் சபை யிருந்தபோதிலும், அதற்கு அவ்வளவு அதிகாரம் இப் பொழுது கிடையாது.

இந்தியா மந்திரி இந்தியா சட்டத்தின்படி இந்தியாவை ஆளுகின்றார். அவருடைய அதிகாரத்தின்கீழ் இந்தியாவில் இருப்பவர் கவர்னர் ஜெனரல். அவர் ராஜப்பிரதிநிதியுமா வர் (வைஸ்ராய்). அவருக்கு உதவியாக ஒரு நிர்வாக சபை இருக்கின்றது; சட்ட சபைகளுமிருக்கின்றன. தேசத்திற்கு வேண்டிய சட்டங்களைச் சட்ட சபைகள் இயற்றுகின்றன.

இம்மாதிரியே மாகாணங்களுக்குக் கவர்னர்களும், சட்டசபைகளும், மந்திரிசபைகளும் இருக்கின்றன. மாகாண சுய ஆட்சித் திட்டத்தின்படி சில விஷயங்களைத் தவிர இதர காரியங்களை மாகாணங்களே நடத்துவதற்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளின் பார்வையில் பல இலாக்காக்களில் பல அதிகாரிகள் இருக்கின்றார்கள்.

இங்கிலாந்தில் நடைபெறும் துரைத்தனத் திட்டத்திற் குப் பார்லிமெண்டு துரைத்தனத் திட்டமென்று சொல்வார்

கள். சற்றேறக்குறைய இம்மாதிரியான திட்டமே ஜர்மானியால் பிடிபடுவதற்கு முன்னால் பிரான்ஸிலும் நடைபெற்று வந்தது. ஆனால், பிரான்ஸில் மன்னரில்லை. அது ஒரு குடியரசு நாடு. மன்னருக்குப் பதிலாக அங்குப் பிரஸிடெண்டு இருக்கின்றார்.

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் துரைத்தனம் மற்றொரு விதமானது. அதை இப்பொழுது கவனிப்போம். அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் ஒரு கூட்டுறவு நாடு (Federal State). முதலில் பல சுயேச்சை நாடுகளாயிருந்தது. பிறகு தங்கள் வலிமையைப் பெருக்கிக்கொள்ளக் கூட்டுறவு நாடாய்விட்டது. ஆதலால் ஐக்கிய மாகாணங்கள் பல நாடுகள் சேர்ந்ததாதலால், ஒவ்வொரு நாட்டிலும் உள் நாட்டுச் சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கத் தனித் துரைத்தனமும், பொது விஷயங்களைக் கவனிக்கப் பொதுத் துரைத்தன (Supreme Government)மும் இருக்கின்றன. தற்காலத்தில் பொதுத் துரைத்தனத்தின் அதிகாரம் அதிகரித்துக் கொண்டுவருகிறது. பொதுத் துரைத்தனத்தின் அங்கங்களை இப்போது கவனிப்போம். ஐக்கிய மாகாணங்களின் துரைத்தனத் திட்டம் மூன்று அங்கங்கள் உயுடையது. அவை: (a) பிரஸிடெண்டு (b) காங்கிரஸ் (c) மேன்மையான நீதிமன்றம். ஐக்கிய மாகாணங்களின் துரைத்தனத் திட்டம் எழுதப்பட்டதானதால் (Written Constitution) ஒவ்வொரு அங்கத்தினதிகாரம் கூடியவரையில் நன்கு வரையறுக்கப் பட்டிருக்கிறது.

(a) **பிரஸிடெண்டு:** இவர்தாம் துரைத்தனத்தின் தலைவர்; நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை இவர் தேர்ந்தெடுக்கப்

படுகிறார். இவரைத் தேர்ந்தெடுப்பவர்களை ஜனங்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். சட்டசபை (Congress) களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டங்களை இவர் தள்ளிவிடலாம். ஆனால், அதே சட்டங்களைச் சட்டசபைகள் மூன்றிலிரண்டு பங்கு ஓட்டுகளால் அமுலுக்குக் கொண்டுவரும்படி செய்யலாம். அதாவது, பிரஸிடெண்டின் மறுப்பு (Veto) ரத்து செய்யப்படலாம். அப்படியிருந்தும், அங்குப் பிரஸிடெண்டின் அதிகாரம் அதிகமென்றே சொல்லவேண்டும். இவர் தமக்கு உதவியாக மந்திரிகளை நியமனம் செய்கிறார். அவசியமென்று நினைக்கும் விஷயங்களைக் காங்கிரஸ் கவனிக்கும்படி சிபார்சு செய்யலாம். ஸெனேட்டின் (இதைப் பற்றிப் பின்பு) அனுமதியின்பேரில் வேறு தேசங்களுடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ளலாம். சண்டை செய்ய வேண்டுமானால் காங்கிரஸின் அனுமதிவேண்டும். ஒருவரே எத்தனை முறை பிரஸிடெண்டாயிருக்கலாம் என்பதைப் பற்றித் துரைத்தனத் திட்டத்தில் யாதொரு ஷரத்துமில்லாமல் போனாலும் இதுவரையில் இருமுறைகளுக்குமேல் ஒருவரும் பிரஸிடெண்டா யிருந்ததில்லை. ஆனால், 1940-ம் வருஷத்தில் ரூஸ்வெல்டு மூன்றாவது முறை பிரஸிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

(b) **காங்கிரஸ்:** இது இரண்டு அங்கத்தினர் சபைகள் அடங்கியது: பிரதிநிதிகளின் சபை (House of Representatives), ஸெனேட் என்பன. பிரதிநிதிகளின் சபை 435 மெம்பர்கள் அடங்கியது. இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை இவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஸெனேட் 96 மெம்பர்கள் அடங்கியது. ஒவ்வொரு நாட்டுக்கு இரண்டு மெம்பர்கள் வீதம், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்;

ஆறு வருஷங்கள் இச்சபையில் மெம்பர்களாக இருக்கலாம். ஆனால், இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை மூன்றிலொரு பங்கு (32 மெம்பர்கள்) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சட்டங்கள் எந்தச் சபையிலும் ஆரம்பிக்கப்படலாம்.

வரி சம்பந்தமான சட்டங்கள் மாத்திரம் பிரதிநிதிகளின் சபையில் ஆரம்பிக்கப்படவேண்டும். எல்லாச் சட்டங்களும் இரண்டு சபைகளிலும் அனுசரிக்கப்படவேண்டும்.

(c) மேன்மையான நீதிமன்றம்: (Supreme Court): இதில் ஒன்பது நியாயாதிபதிகள் இருக்கிறார்கள். இவர்கள் பிரஸிடெண்டினால் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், பிரஸிடெண்டு அவர்களைத் தள்ள முடியாது. சட்ட சபைகளால் அங்கீகரிக்கப்பட்ட எந்தச் சட்டத்தையும் துரைத்தனத் திட்டத்திற்கு விரோதமென்று இந்நீதிமன்றம் தள்ளிவிடலாம். ஆதலால், துரைத்தன அங்கங்களில் இது முக்கியமானது. ஆயினும், கீழே சொல்லப்படும் துரைத்தனத் திட்டம் மேல் கூறியவற்றிற்கு மாறானது.

மேலே கூறப்பட்ட துரைத்தனங்களில் ஜனங்களின் பங்கு அதிகமாயிருக்கின்றது. இப்பொழுது சொல்லப்படும் துரைத்தனத் திட்டத்திற்கு ஜனங்கள் சம்பந்தம் அதிகமாகக் கிடையாது. இப்படிப்பட்ட துரைத்தனத் திட்டத்திற்குச் சர்வாதிகாரத்துவம் என்று பெயர். அம்மாதிரியான துரைத்தனங்கள் ஜர்மனி, இட்டாலி, ருஷியா முதலிய நாடுகளில் நடைபெறுகின்றன. இவ்விடங்களில் ஒருவரே சகலமான அதிகாரங்களையும் நடத்துகின்றார். ஜர்மனியில் ஹிட்லரும், இட்டாலியில் முஸ்ஸலோனியும், ருஷியாவில் ஸ்டாலினும் இம்மாதிரியான பதவிகளை

வகிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு கக்ஷித் தலைவர் ஆவர். அக்கக்ஷிகள் ஜர்மனியில் **நாஸி**, இட்டாலியில் **பாஸிஸ்டு**. ருஷியாவில் **கம்யூனிஸ்டு** எனப் பெயர் பெறும். ஒவ்வொரு கட்சியும் அந்தந்த தேசத்தில் பிரதானமாய்விட்டபடியால், அதனதன் தலைவரின் அதிகாரமும் எல்லையற்றதாக விளங்குகிறது. இவ்விதத் துரைத்தனமுள்ள தேசத்தில், வேறு துரைத்தன அங்கங்கள், (சட்ட சபைகள் முதலியவை) இருந்த போதிலும், அவைகளுக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. இத் துரைத்தன சம்பந்தமாக வேறு அதிகமான விவரங்கள் தேவையில்லை.

---

5. உபாத்தியாயரின் ஆயத்தம் (தொடர்ச்சி)

(a) **பாடக் குறிப்புக்கள் :** (அனுபந்தத்தில் பார்க்கவும்.)

(b) **உதவிகள் :** இவை பல வகைப்படும். சமாசாரப் பத்திரிகைகளிலிருந்தும், இதர பிரசுரங்களிலிருந்தும் ஆட்சி முறை சம்பந்தமான விஷயங்களைக் கத்தரித்து நோட்டுப் புத்தகங்களில் ஒட்டி வைத்துக்கொள்ளலாம். சாராம்சங்களை எழுதியும் வைத்துக் கொள்ளலாம்.

(c) **சித்திரங்கள் முதலியவை :** இவற்றைப்பற்றி உதவிகள் என்ற தலைப்பில் சொல்லியிருக்கிறோம்.

(d) **பல இடங்களைச் சுற்றிப்பார்த்தல் :** இதற்குத் தக்க பயிற்சி வேண்டும். பார்த்த இடங்களைப்பற்றி விவரங்கள் சேகரித்து உபயோகப்படுத்தக்கூடிய பயிற்சி உபாத்தியாயருக்கு இருக்க வேண்டும்.

(e) **அனுசரித்துக் காட்டல் :** இவற்றையெல்லாம்விட சமூக வாழ்க்கை சம்பந்தமாக உபாத்தியாயரின் கடமை முக்கியமானது. நாம் சுத்தமாயிருக்கவேண்டும்; பிறர்களின் பொருள்களை அசுத்தஞ் செய்யக்கூடாது; பிறர்களின் நன்மையை நமது நன்மைக்கு முன்னதாகக் கருத வேண்டும்; கிராமத்தில் தொத்து வியாதிகள் பரவும்போது முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; குளம் குட்டைகளை அசுத்தஞ் செய்யக்கூடாது. கிராமத்தில் துரைத்தன உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைக்கவேண்டும்; அமைதியைப் பெருக்கவேண்டும் என்று உபாத்தியாயர் வகுப்பில் போதிக்கவேண்டும். போதித்தால் மாத்திரம் போதாது. போதிப்பதுபோல் தாமும் நடக்கவேண்டும். அப்பொழுது தான், உபாத்தியாயர் சொல்வதில் பிள்ளைகளுக்கு மதிப்பு ஏற்படும்.

அனுபந்தம்

பாடக் குறிப்புகள்

A. சரித்திரம்

I. அசோகர்

வகுப்பு—III. நேரம்: **30** நிமிஷங்கள்.

உபகரணங்கள்—1. கலிங்கப்போரை விளக்க ஒரு சித்திரப் படம் — 2. அசோகர் பௌத்த மதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்வதுபோல் ஒரு சித்திரப் படம் (படங்களை உபாத்தியாயரே தயாரித்துக் கொள்ள வேண்டும்.)

A. அசோகர் பண்டைக் காலத்து அரசர்களுக்குள் பிரபலமானவர், பௌத்த மதத்தைப் பரவச் செய்வதில் மிகவும் ஊக்கமாயிருந்தார்.

பிள்ளைகளுக்குப் புத்தரைப் பற்றி ஞாபகப்படுத்தி, அவர் மதத்தில் முக்கியமான அமிசம் அஹிம்சை யென்பதைப் பிள்ளைகளிடம் இருந்து வரவழைத்தல். அவருக்குப் பிறகு பௌத்த மதத்தைப் பரவச் செய்த முக்கியமான அரசர் அசோகர் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுதல்.

B. அசோகர் காலம் கி.மு. 273—233. மௌரிய வமிசத்தைச் சார்ந்தவர்.

அசோகர் வெகு காலத்திற்கு முன் (அதாவது 2175-வருஷங்களுக்கு முன்) வசித்தாரென்று சொல்ல வேண்டும். பண்டைக் காலம் என்னும் அபிப்பிராயத்தைப் பல உதாரணங்களால் விளக்க வேண்டும். அவர் மௌரிய அரச ராஜ வமிசத்தைச் சேர்ந்தவரென்றும் சொல்லவேண்டும்.

C. கலிங்கப் போர் : ஏராளமான உயிர்ச்சேதம்; அசோகரின் அனுதாபம் ; பௌத்த மதத்தைத் தழுவுதல்.	அக்காலத்து அரசர்கள் வேறு நாடுகளை ஜயித்தல் தங்களுடைய கடமையென்று எண்ணினார்கள் என்று சொல்லி, அசோகருடைய ராஜ்யத்திற்குத் தென் கிழக்கில் கலிங்கமிருந்தது என்று சொல்லி, ஆதலால் அதை அசோகர் ஜயிக்க நினைத்தது இயல்பென்று பிள்ளைகள் அறியும்படி செய்தல். சண்டை நடந்தால் எவ்விதமான சேதங்கள் ஏற்படுமென்று பிள்ளைகளிடமிருந்து வரவழைத்தல். படத்தைக் காண்பித்தல். அதன் பயனாக அஹிம்சையை வற்புறுத்தும் பௌத்த மதத்தை அசோகர் தழுவினார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுதல்.
D. அசோகர் பௌத்த மதத்தைப் பல விதமாகப் பரவச் செய்தல். தாமும் அதன் கொள்கைகளை அனுஷ்டித்தல்.	அரசன் நடப்பதுபோல் குடிகளும் நடப்பார்கள் என்ற நீதி வாக்கியத்தைச் சொல்லி, பௌத்த மதக் கொள்கைகளுக்கு இசைய அசோகர் சண்டையை நிறுத்தி விட்டார் என்றும், மனிதர்களுக்கு மாத்திரமல்ல, இதரப் பிராணிகளுக்கும், பட்சிகளுக்கும்கூட வைத்திய சாலைகள் ஏற்படுத்தினார் என்றும், தாமே பௌத்த மதக் கொள்கைகளை

அனுசரித்து, குடிகளும் அனு சரிக்கும்படி பல ஏற்பாடுகள் செய்தாரென்றும் பிள்ளைகளுக் குச் சொல்லுதல். அசோகர் பௌத்த மதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்வதுபோல வரையப்பட்டிருக்கும் சித்தி ரத்தைப் பிள்ளைகளுக்குக் காண்பித்தல்.

E. அசோகரது அரசாட்சி நாற்பது வருஷங்கள். நாட்டில் அமைதியும் செல்வமும் மேலோங்குதல்.

அசோகருடைய மேன்மை யான அரசாட்சி நீண்டது என்று சொல்லுதல். நாட்டில் அமைதியும் செல்வமும் நிறைந்து இருந்ததென்று பிள்ளைகளுக்கு உதாரணங்க ளுடன் போதித்தல்.

பாடத்தின்முடிவில் வினக்கள்.

II. பல்லவர்கள்

வகுப்பு—IV. **நேரம்—30 நிமிஷங்கள்.**

உபகரணங்கள்— (1) மஹாபலிபுரத்திலிருக்கும் கற் கோயில்களின் படங்கள்— (2) காஞ்சீபுரத்திலிருக்கும் கோயில் களின் படங்கள்— (3) தென்னிந்தியாவின் படம்; பல்லவ ராஜ் யம்— (5) சென்னை ராஜதானியின் படம்.

A. பல்லவ அரசர்கள் தென் னிந்தியாவில் ஆண்டார்கள். காலம்—கி. பி. 250—893. தலை நகர்—காஞ்சீபுரம்.

ஹர்ஷ வர்த்தனர் வடஇந்தி யாவில்ஆண்டகாலத்தில்,தென் இந்தியாவில் ஆண்ட பிரபல மான அரசர்கள் பல்லவர்கள் என்று பிள்ளை களுக்குச்

சொல்லுதல். அவர்கள் ஆண்ட காலத்தை (ஆரம்ப இறுதி வருஷங்களைக் கரும்பலகையில் எழுதி) எத்தனை வருஷங்கள் ஆண்டார்களென்று பிள்ளைகளிடமிருந்து வரவழைத்தல். அவர்கள் தலைநகர் காஞ்சீபுரமென்று சொல்லி, சென்னை ராஜதானிப் படத்தில் அதன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தல். பிள்ளைகளிருக்கும் ஜில்லாவுக்கு எத்திசையில் காஞ்சிபுரம்இருக்கிறதென்றுதெரிந்து கொள்ளல்.

B. பல்லவ அரசர்களில் முக்கியமானவர்கள் — மகேந்திர வர்மரும் (கி. பி. 600—630) அவர் மகனான நரசிம்மவர்மரும் (கி. பி. 630—668).

இவர்கள் பிரபலமான அரசர்கள் என்று சொல்லி, ஹர்ஷர் காலமும் இவர்கள் காலமும் சற்றேறக்குறைய ஒன்று என்பதைப் பிள்ளைகளிடமிருந்து வரவழைத்தல். தென்னிந்தியாவின் படத்தில் பல்லவ ராஜ்யத்தைக் கண்டு பிடிக்கச் செய்தல்.

C. சாளுக்கியருடன் அடிக்கடி சண்டை—நரசிம்மவர்மரின் வெற்றி.

ஏன் சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் சண்டையேற்படவேண்டுமென்பதைப் படத்தின் மூலம் பிள்ளைகள் தெரிந்துகொள்ளல்.

நரசிம்மவர்மன் ஒரு சமயம் சாளுக்கியரின் தலை நகரமான வாதாபியைப்பிடித்துக்கொண்

D. பல்லவ அரசர்களின் மேன்மையான அரசாட்சி.

பல்லவ நாட்டைப் பற்றி **யுவான்ஸ்வாங்** அத்தாட்சி.

"நாடு வளமுள்ளது, விவசாயம் நன்கு நடைபெறுகின்றது, ஜனங்கள் தைரியமுள்ளவர்கள், நாணயமுள்ளவர்கள், கல்விப் பற்றுடையவர்கள்."

டதால் 'வாதாபி கொண்ட (ஜயித்த) நரசிம்மர்' என்ற பட்டம் இவருக்குக் கிடைத்தது என்று பிள்ளைகளுக்குச் சொல்லுதல்.

காஞ்சீபுரம், மாமல்லபுரம் கோயில்கள் உள்ள படங்களைப் பிள்ளைகளுக்குக் காண்பித்தல். மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கோயில்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லினால் செய்யப்பட்டது என்று சொல்லுதல். சீன தேசத்திலிருந்து அக்காலத்தில் வந்த யாத்திரிகர் ஒருவர் பல்லவ ராஜ்யத்தைப்பற்றிப் பின் வருமாறு கூறி யிருக்கிறாரென்று விஷயத்தில் கண்டதைச் சொல்லுதல்.

பல்லவர்களுக்குப் பிறகு பிரபல மடைந்த அரசர்கள் சோழர்கள் என்று சொல்லுதல்.

பாடத்தின் முடிவில் வினாக்கள்.

III. பாபர்

வகுப்பு—V. நேரம் 40 நிமிஷங்கள்.

உபகரணங்கள் — 1. பாபர் உருவப் படம் — 2. பாபர் காலத்தை விளக்க இந்தியா படம்—3. முக்கியமான வருஷங்கள்கொண்ட காலக்கோடு.

A. கோரி முகம்மதுக்குப் பிறகு பல முகம்மதிய சுல்தான்கள் டெல்லியில் ஆண்டு வந்தார்கள். கி. பி. 1526-ஆம் ஆண்டில் லோடி வமிசத்தைச் சேர்ந்த இப்ராஹீம் லோடி டெல்லி சுல்தாஞக இருந்தார்.

கோரி முகம்மதுவின் படையெடுப்புகளின் பயஞக முகம்மதிய அரசாட்சி இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட தென்பதைப் பிள்ளைகளிடமிருந்து வரவழைத்தல். அம்மாதிரி முதலில் ஆண்ட முகம்மதிய வமிசத்திற்கு அடிமை வமிசமென்று சொல்லுதல். இவர்களெல்லோரும் (பொதுவாக ஆப்கானிஸ்தானப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள்) ஆப்கானிய ஜாதியைச் சார்ந்தவர்களென்று சொல்லுதல். 1526-ஆம் ஆண்டில் லோடி வமிசத்தில் பிறந்த இப்ராஹீம் லோடி டெல்லிச் சுல்தாஞக இருந்தார். டெல்லியை இந்தியா படத்தில் காண்பிக்கச் செய்தல்.

B. இப்ராஹீம் லோடி அதிக கர்வமுள்ளவர் ; சாமர்த்தியமில்லாதவர் ; பிரபுக்களை அவமதித்தார்.

இப்ராஹீம் லோடியின் கர்வத்தின் பயனென்னவென்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குதல். காபூல் எங்கிருக்கிறது

ஆதலால்,பஞ்சாப் கவர்னரான டௌலத்கான் என்பவர் காபூலுக்கு அரசரான பாபரை இந்தியாவின் மீது படையெடுக்கும்படி அழைத்தார்.

C. **பாபர் யார்?** கி.பி. 1483-ம் ஆண்டில் சாமர்க்கண்டில் பிறந்தார். 11வயதில் சாமார்க்கண்டுக்கு அரசரானார். ஆயினும்,முரட்டுத்தனமான தமது குடிகளினால் அரசை இழந்தார். அஞ்சாநெஞ்சம் படைத்தவர். ஆதலால், சமயம் பார்த்து 1504-ல் காபூலைப் பிடித்துக் கொண்டார்.

D. பாபருக்கு இந்தியாவின் மீது படையெடுக்க விருப்பம். தௌலத்கான் அழைப்பு. 1524 பஞ்சாப்மீது படையெடுப்பு.

1526-ல் டெல்லியின் மீது படையெடுப்பு. பானிப்பட்டு யுத்தம். இப்ராஹீம் லோடி இறந்தது.

என்று பிள்ளைகளைப் படத்தில் கண்டு பிடிக்கும்படி செய்தல்.

பாபரின் குணாதிசயங்களையும், பால்ய சரித்திரத்தையும் பிள்ளைகளுக்குச் சொல்லுதல். சாமர்க்கண்டு அரசு மத்திய ஆசியாவிலுள்ளது என்று சொல்லுதல்.

கஜினி முகம்மது, கோரி முகம்மது, முதலியோர் இந்தியாவின் மீது படையெடுத்த தன் நோக்கம் என்னவென்று வரவழைத்தல். அந்நோக்கங்களே பாபருக்கும் இருந்தது என்று சொல்லுதல். பானிப்பட்டைப் படத்தில் காண்பிக்கச் செய்தல். காலக்கோட்டில் இது வரையில் கொடுத்திருக்கும் வருஷங்களைக் குறித்து அவ் வருஷங்களில் ஏற்பட்ட சம்பவங்களை வரைதல்.இப்ராஹீம் இறந்ததால் யார் டெல்லியில் அரசராவாரென்பதை வருவித்தல்.

பாடத்தின் முடிவில் வினாக்கள்

E. பாபர் முதல் முகலாய சக்கரவர்த்தி.

ராஜபுத்திரர்களையும், ஆப்கானியர்களையும் போரில் வென்று தம்முடைய அதிகாரத்தை வங்காளம் வரையில் பரவும்படி செய்தார்.

பாபரை முகலாய சக்கரவர்த்தி யென்று சொல்லக் காரணம்: தாய்வழியில் மொகலாயர்களைச் சார்ந்தவராதலால், அம்மாதிரி அழைக்கப்பட்டார். (மொகலாயர்=மங்கோலியர்) ஆயினும், தகப்பன் வழியில் துருக்கியரைச் சார்ந்தவராதலால், தம்மைத் துருக்கியரென்று சொல்லிக் கொள்வதில்தான் அவருக்கும் பிரியம்.

பானிப்பட்டில் ஜயித்த போதிலும், ஆப்கானியரையும், ராஜபுத்திரர்களையும் ஜயித்தால்தான் பாபரின் அதிகாரம் வட இந்தியாவில் செல்லுமென்பதைப் பிள்ளைகளுக்குச் சொல்லுதல். ராஜபுத்திர ராஜ்யங்கள், ஆப்கானியர் பிரபலமாயிருந்த பாகங்களை இந்தியாப் படத்தில் காண்பிக்கச் செய்தல். அவர்களை வென்றதைச் சொல்லி, பாபரின் ராஜ்யத்தின் விஸ்தீரணத்தைப் படத்தில் காண்பிக்கச் செய்தல்.

F. பாபர் நீண்ட காலம் ஆளவில்லை.

1530-ல் இறந்தார்.

விஷயத்தில் கண்டதைப் போதித்தல். காலக்கோட்டைப் பூர்த்தி செய்தல்.

பாடத்தின் முடிவில் வினாக்கள்.

B. ஆட்சி நூல்

IV

சாலைகளில் செல்லும்போது அனுசரிக்க வேண்டிய விதிகள்

வகுப்பு—IV. **நேரம்—30 நிமிஷங்கள்.**

உபகரணங்கள்—ஆங்காங்கு விஷயங்களை விளக்க ஸ்கெட்சுப் படங்கள் கரும்பலகையில் வரையவேண்டும்.

A. ஜனங்கள் சாலைகளின் வழியாகச் செல்லும்போது சில விதிகளை அனுசரிக்க வேண்டும்.

சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைப்பற்றி விவரித்து, அவைகள் ஏற்படுவதற்குக் காரணம் சாலைகள் சம்பந்தமாகத் துரைத்தனத்தார் ஏற்படுத்தி யிருக்கும் விதிகளை அனுசரிக்காததுதான் என்று விளக்குதல்.

B. பாதசாரிகள் அனுசரிக்க வேண்டிய விதிகள்:

(1) இடது பக்கமாகச் செல்ல வேண்டும்.

(2) சாலைகளில் நின்று கொண்டு வம்பு பேசாதிருத்தல்.

(3) சாலைகளில் பழந் தோல்கள், கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் முதலியவை கிடந்தால் எடுத்து எறியவும்.

முதலில் சாலைகளில் செல்லுவோர் இருவகை. பாதசாரிகள், வண்டிகளில் செல்பவர் என்று வருவித்து, பிறகு கொடுத்திருக்கும் விதிகளை ஒவ்வொன்றாகப் பிள்ளைகளுக்குச் சொல்லி, அம்மாதிரி விதிகளை ஏன் அனுசரிக்க வேண்டும் என்பதைப் பிள்ளைகளிடமிருந்தே வரவழைக்க முயற்சித்தல்.

(4) சாலைகளைக் கடக்கும் போது ஜாக்கிரதையாகப் போதல்.

(5) சாலைகளில் விளையாடக் கூடாது.

(6) ரயில், டிராம், பஸ் முதலிய வண்டிகளில் ஏறும் போதும் இறங்கும்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

(உ-ம்.) முதலாவது விதியில், ஸ்கெட்சுப் படம் போட்டுச் சாலைகளின் இருபுறத்திலிருந்து வருபவர்களும் ஒரே பக்கமாக வந்தால் ஏற்படும் சங்கடங்களை விவரித்தல். இரண்டாவது விதியை அனுசரிக்காமல் போனால் செல்லும் ஜனங்களுக்குத் தடையும் அசௌகரியமும் ஏற்படுமென்று வரவழைத்தல்.

பழத் தோல்களின்மேல் காலை வைத்தால் வழுக்கி விழுவதற்கு ஏதுவாயிருக்குமென்றும், கண்ணாடித் துண்டுகள், ஆணிகள் காலில் பட்டால் காயம் ஏற்படுமென்றும், நமது நன்மையையும் பொது நன்மையையும் உத்தேசித்து மூன்றாவது விதியை அனுசரிக்க வேண்டியது அவசியம் என்பதைப் பிள்ளைகள் உணரும்படி செய்தல். இது மூன்றாவது விதியை ஒட்டியது.

அடுத்த விதிப்படி சாலையைக் கடப்பதில் ஏன் ஜாக்கிறதையாக இருக்கவேண்டும் என்பதை விளக்குதல். இருபுறமும் வண்டிகள் வருகின்றனவா என்பதைப் பார்த்துக் கொண்டு சாலையைக் கடக்க

வேண்டும். ஏன் கவனிக்க வேண்டும் என்பதை வற்புறுத்தல்.

ஆருவது விதிப்படி நாம் அனுசரிக்கவேண்டியதை நன்கு விளக்கவேண்டும்.

(a) வண்டி நின்ற பிறகு தான் ஏறவும், இறங்கவும் வேண்டும்.

(b) கதவுகளைத் திறந்து வைத்துக் கொள்ளக்கூடாது.

(c) ஜன்னல் பக்கத்தில் நின்று கொண்டிருக்கக் கூடாது.

C. வண்டி ஓட்டுபவர்கள் அனுசரிக்கவேண்டியவிதிகள்.

B-யில் கொடுத்திருக்கும் 1 முதல் 4. விதிகள்.

1-4, விதிகளை வண்டி ஓட்டுபவர்களும் ஏன் அனுசரிக்க வேண்டுமென்று பிள்ளைகளிடமிருந்து வரவழைத்தல். நான்காவது விதி சம்பந்தமாக இரண்டு சாலைகள் கூடுமிடத்தில் பட்டணங்களில் போலீஸ்காரன் நின்று கொண்டு, செல்லும் வண்டிகளை அபாயமின்றிச் செல்லும்படி, திட்டம் செய்கிருன் என்பதை விளக்குதல்.

பாடத்தின் முடிவில் வினுக்கள்.

V

நாம் ஏன் சாப்பிடவேண்டும்?
எதைச் சாப்பிடவேண்டும்?

வகுப்பு—V. **நேரம்—40 நிமிஷங்கள்.**

A. **உணவு**: உணவு உட்கொள்ளுவதால் ஏற்படும் பலன்கள். (1) உடல் வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறது.	நமக்கு உணவு வேண்டும் என்பதையும், வேண்டாம்என்பதையும் எப்படித் தெரிந்துகொள்ளுகிறோம். பிள்ளைகளிடமிருந்து வருவித்தல்.
(2) உஷ்ணமாக வைக்கிறது. (3) உடல் வளரும்படி செய்கிறது. (4) உடலில் ஏதாவது கெடுதிகள் ஏற்பட்டால் அதைப் போக்க வேண்டியது.	ஆரோக்கியமாக இருக்கும் ஒருவன் உடல் எப்படி யிருக்கிறது என்பதைக் கேள்விகள் மூலம்வருவித்தல், உணவு உட்கொள்வதால் ஏற்படும் பலன்களை விளக்குதல்.
B. மேற்கூறிய பலன்கள் உணவுப் பொருள்களிலுள்ள எந்த வஸ்துக்களால் ஏற்படுகின்றன? (1) **பிசிதங்கள் (Proteins)**: உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை; சக்தியையும் விருத்தி செய்கின்றன. பிசிதங்கள் பால், முட்டையின் கரு, விதைகள், மாமிசம் முதலியவற்றிலிருக்கின்றன.	பிள்ளைகள் உட்கொள்ளும் உணவுகள்என்னவென்றுவிசாரித்து அவற்றில் கொடுக்கப்பட்டிருக்கும் வஸ்துக்களில் எவை இருக்கின்றனவென்றும் எவை இல்லையென்பதையும் விளக்குதல். பிறகு எவ்விதமான உணவைப் பிள்ளைகள் உட்கொள்ளவேண்டும் என்பதைப் பிள்ளைகளிடமிருந்தே வருவித்தல்.

(2) **கொழுப்பு:** இது உஷ்ணம்கொடுக்கிறது. இது பால், வெண்ணெய், எண்ணெய், நெய், மாமிசக் கொழுப்பு முதலியவற்றில் இருக்கிறது.

(3) **கரி நீர்கை (Carbo hydrate):** சக்தியை உண்டாக்குவது. மாவிலும் (Starch), சர்க்கரையிலும் இவ்வஸ்து இருக்கிறது. இவ்விரு பொருள்களும் ரொட்டி, உருளைக்கிழங்கு, அரிசி, பால் முதலிய உணவுப் பொருள்களில் காணப்படுகின்றன.

(4) **உப்பு:** உணவை ஜீரணம் செய்கிறது. உப்பு பலவகைப் படும். பால், காய் கறிகள் முதலியவற்றிலும் இருக்கின்றது. ஆகாரத்திலும் சாதாரண உப்பைச்சேர்த்துக் கொள்கிறோம்.

(5) **தண்ணீர்:** உடலின் கனத்தில் பெரும்பாகம் தண்ணீரானதால் (66%) தண்ணீர் குடிக்கவேண்டியது அவசியம்.

(6) **உயிர்ச் சத்துக்கள்:** (Vitamin): சமைக்கப்படாத வஸ்துக்களில் அதிகம். திரேக ஆரோக்கியத்துக்குஅவசியமானவை. அவை பலவகைப் படும்.

பாலும் பழமும் உடலுக்கு அவசியமென்பதை வற்புறுத்தல்.

A. B. C. D. E, முதலியவை ஒவ்வொன்றும் உடலுக்கு ஒவ்வொரு விதமான உதவியைச் செய்கிறது.

கடைசியாக நாம் ஒவ்வொருவரும் உட்கொள்ளவேண்டிய உணவுப் பொருள்களின் ஜாபிதா தயாரித்தல்

பாடத்தின் முடிவில் வினுக்கள்.

நடித்தலுக்கேற்ற சம்பாஷணை

ஹர்ஷர்

காட்சி—1

இடம்: தானேசர் நகரம்; அரண்மனையில் ஒரு அறை.

பாத்திரங்கள்: அரச குமாரர்கள். [ராஜ்ய வர்த்தனரும் ஹர்ஷவர்த்தனரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிருர்கள்.].

ராஜ்ய வர்த்தனர்: கண்ணே! ஹர்ஷ! நமது தகப்பனர் இருக்கும் வரையில் எனக்கு யாதொரு கவலையும் இல்லாமல் இருந்தது. இப்பொழுது, விதியின் பயனுக அவர் காலஞ் சென்றமையால், அவருடைய ஸ்தானத்தை எப்படி வகிக்கப்போகிறேன் என்ற பயமும், கவலையும் அதிகமாய்விட்டன.

ஹர்ஷர்: அண்ணு! க்ஷத்திரிய குலத்தில் உதித்த தங்களுக்குப் பயமேது. தங்களுக்கு இனிமேல் இருக்க வேண்டியது ஒரே கவலைதான்.

ரா: ஹர்ஷ! அதென்ன?

ஹ: தங்கள் குடிகள் க்ஷேமமாயிருக்கவேண்டும் என்ற கவலைதான்.

ரா: தம்பீ! நீ சொல்வது உண்மையே. (கைகுவித்து) எல்லாம் வல்ல கடவுள் எப்பொழுதும் என்னைச் செங்கோல் மன்னனாகச் செய்வாராக.

[வெளியில் ஆரவாரம்]

குலகுரு, மந்திரி முதலியோர்: ஜய விஜயீபவ! எங்கள் மன்னர் ராஜ்ய வர்த்தனர் நீடூழி வாழ்க! அரசே, பட்டாபிஷேகத்திற்கு எல்லாம் தயாராயிருக்கின்றன; தயவு செய்யவேண்டும்.

ரா: அப்படியே சித்தமாயிருக்கிறேன். அரசன் குடிகளின் ஊழியனல்லவா?

காட்சி—2

இடம்: தானேசர் நகரின் அரச சபை.

பாத்திரங்கள்: ராஜ்ய வர்த்தனர், ஹர்ஷர் முதலியோர்.

ராஜ்ய வர்தனர்: ஹர்ஷ! என்ன, இன்று என் மனத்தில் சந்தோஷம் இல்லாமலிருக்கிறதே. எப்போதும் போலில்லாமல், மாறுக இருக்கின்றது.

ஹர்ஷர்: எனக்கும் அப்படியே இருக்கின்றதே; என்ன விளையுமோ தெரியவில்லை. (ஒரு தூதன் ஓடிவந்து அரசர் காலில் விழுந்து கோவென்று கதறுகிறான்.)

ரா: என்ன! நீ யார்? என்ன விஷயம்? உனக்கு எவர் என்ன தீங்கு இழைத்தார்?

தூதன் : அரசே....(விம்மி) நான் எப்படிச் சொல்வேன்.... எனக்கொன்றுமில்லை (சற்று நிதானமாக) நான் கன்னேசியிலிருந்து வருகிறேன்.

ரா, ஹர் : கன்னேசியிலிருந்தா ? எங்கள் சகோதரி ராஜ்ய ஸ்ரீக்கு என்ன கெடுதி நேரிட்டது ?

தூதன் : அரச ! மாளவ தேசத்தரசன் எங்கள் அரசரைக் கொன்றுவிட்டு, எங்கள் மகாராணி—தங்கள் சகோதரியைச் சிறையிலிட்டிருக்கிருன், கொடும்பாவி.

ரா : (கோபாவேசத்துடன்)—மாளவ தேசத்தரனு ! ராஜ்ய ஸ்ரீயை சிறையில் அடைத்திருக்கிருனு ? என்ன ? மாளவ மன்னன் எங்கள் வமிசத்தினரை அவமதிப்பதா ! (கோபத்தைக் காட்டும் சிரிப்புடன்) நன்ருயிருக்கிறது ! நாய் சிங்கத்தின் பிடரியைப் பிடித்து இழுப்பதா ! கன்றுக்குட்டி புலியைச் சிறை பிடிப்பதா ! இருள் சூரியனை மறைப்பதா ! ஹாஹா!—இக்கணமே அப்பாதகனை ஒழிக்கிறேன் ! மாளவத்தை அழிக்கிறேன் ! சேனுதிபதி !

சேனுதிபதி : மகாராஜா.

ரா : நமது சைன்யத்தைச் சீக்கிரம் ஆயத்தம் செய். புறப்படுவோம், மாளவ மன்னனை எதிர்க்க ; தம்பி ! நாம் வரும் வரையில் ராஜ்ய காரியங்களைக் கவனித்து வா. நீ இளவரசல்லவா ;

ஹ : அப்படியே மகாராஜா.

காட்சி—3

இடம் : தானேசர் அரச சபை.

பாத்திரங்கள் : ஹர்ஷர், சபையோர் முதலியோர்.

ஹர்ஷர் : சபையோர்களே ! நமது அருமைச் சகோதரர் வெற்றி யடைந்தும் மாளவதேசத்து அரசனுடைய சூழ்ச்சியால் கொல்லப்பட்டதால், உங்கள் வேண்டு கோளுக்கு இணங்கி இப்போது தானேசருக்கு அரசனைக ஒப்புக்கொண்டோம். ஆயினும், நமது முதற் கடமை நமது சகோதரியின் கணவரையும், நமது சகோதரரையும் கொன்ற மாளவ மன்னனை மண்ணுக்கிவிட்டு நமது அருமைச் சகோதரியை மீட்டுவர வேண்டும்.

சபையோர் : அப்படியே அரசே ! சீக்கிரம் தாங்கள் வெற்றி யுடன் திரும்புவீராக ! ஜய விஜயீபவ !

காட்சி—4

இடம் : விந்திய மலைக்காடு ;

(தீ வளர்ந்து எரிகிறது. எதிரில் ஒரு ஸ்திரீ நிற்கிருள்.)

ஸ்திரீ : பிரபாகர வர்த்தனருக்கு அருமை மகளாகப் பிறந்து, கன்னேசி அரசர் மனைவியான எனக்கு இப்படிப்பட்ட முடிவா ! உம் ! விதியை வெல்ல யாரால் முடியும் ! மானம் பெரிதே தவிர, உயிர் பெரிதல்ல. இதுவே வீர சொர்க்கத்திலிருக்கும் என் கணவரைச் சேரவழி.

(தீயில் குதிக்கப் போகும் போது)

ஹர்ஷர் : நில் ! ராஜ்யஸ்ரீ ! தீயில் விழாதே ! ஹர்ஷன் வந்தேன். (ஹர்ஷன் ஓடிவந்து ராஜ்ய ஸ்ரீயைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டு) அக்கா ! ஒரு நிமிஷம் கழித்து வந்திருந்தால் தானேசருக்கு அரசனே இல்லாமல் போயிருக்கும்.

ரா : அதெப்படி ஹார்ஷா ?

ஹ : என் அருமைச் சகோதரரையும் இழந்துவிட்டு, உன்னையும் இழந்து நான் உயிர் தரிப்பேன் என்று எண்ணுகிருயா ?

ரா : இல்லை தம்பி! உன்னைக் கண்ட ஆனந்தத்தில் யோசிக்கும் சக்தியே போய்விட்டது.

ஹ : அக்கா! நம்முடைய உயிருள்ள வரையில் நாம் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியக்கூடாது. உன்னுடைய உதவியால்தான் நடு நிலைமையுடன் நான் ராஜ்யத்தை ஆளவேண்டும்.

ரா : அப்படியே கடவுள் அருள் புரிவாராக!

C. படங்கள்

I



படம் 1. இந்தியா - இதிகாச காலமும் புத்தர் காலமும்


தமிழகம்
பல்லவர்------கி.பி.
ஏழாவது நூற்றாண்டு
மைல்
0 100 200
75° 80° 85°
20° 15° 10°
நருமதை
தபதி
மஹாநதி
கலிங்கம்
கோதாவரி
சாளுக்கியர்
கிருஷ்ணா
வாதாபி
வடபெண்ணை
வங்காள
விரிகுடா
பாலாறு
காஞ்சீபுரம்
மஹாபலிபுரம்
தென்பெண்ணை
காவிரி
தஞ்சாவூர்
மதுரை
வைகை
இலங்கை
இந்து மஹா சமுத்திரம்
வ.

படம் 2. தமிழகம்



படம் 3. தென்னிந்தியா—மௌரியர் காலம்



படம் 4. அக்பரது இராச்சியம்



படம் 5. அவுரங்கசீப்பின் இராச்சியம்